_தாஜவ — தாயார்கள்போல

ாஜயத — அடைவியுங்கள்

ஸ) — எந்த ரஸத்திஹுடைய

யாய — நிலையின்பொருட்டு

நய வ — ப்ரீதியையடைகிறீர்களோ

தமெஷ — அந்த ரஸத்துக்காக

ப: — உங்களை

ஜாம் — மிகவும்

ாஜ — அடையக்கடவோம்

மிஹகுவ: — ஓ ஜலங்களே

நஃ — எங்களை

ஜநயயா — ஜநித்தவர்களாகச் செய்யுங்கள்

என்பதாம்

அத்வைத பாஷ்யம்; தரிஶநம், ஸ்பரிஶநம், ஸ்நானம், பா... ஸ...கத்தை உண்டுபண்ணுவது ஜலங்... ணம், முதலியவைகளால் ...கள், நல்ல மழைபெய்து அதனால் தாந்யங்கள் விளைந்து பூர்ண... களே, நல்ல மழைபெய்து அதனால் தாந்யங்கள் விளைந்து பூர்ண... மான ம்ருஷ்டாந்நம் கிடைக்கும்படி செய்ய வேண்டியவை ஜல... மான ம்ருஷ்டாந்நம் கிடைக்கும்படி செய்ய வேண்டியவை ஜல... ங்களே. இந்த்ரிய புஷ்டிக்காக அந்நம் ப்ரார்த்திக்கப்படுகிறது. பூர்... ணமான ம்ருஷ்டாஹாரம் கிடைத்தால் தான் எல்லா இந்த்ரிய... ங்களும் (கண் முதலியவை) ஸந்தோஷத்தையடையும், அதனால் ... தான் புத்தி பலத்தையடையும். புத்தியும் இந்திரியமும் பலத்... ...த்தை யடைந்தால் அவை எல்லா கர்மங்களையும் அனுஷ்டிக்கும் திறமையை யுண்டாக்கும். அந்தத்திலும் ரஸத்தோடுகூடிய அந்... நமே குணம் கொடுப்பதாகையால் அந்தரஸத்தை ப்ரார்த்திப்... ...பது. தாய்மார்கள் முலைப்பால் கொடுத்துக் குழந்தைகளை வள... ...ப்பதுபோல் உங்கள் ரஸத்தைத்தந்து எங்களைப் போஷிக்க ...ண்டுமென்று ப்ரார்த்திக்கிறது. ஆதாவினால் மறுபடி ப்ரார்த்... ...செய்கிறது மேல், எந்தரஸம் உங்களுக்கே ஸந்தோஷத்... ...க்கி...கிறதோ, அந்தரஸத்தை எங்களுக்குத் தரவேணு... ...ங்கள் ஸந்தாநத்தை யுண்டுபண்ணும் சக்தியை ...செய்யவேண்டும். நாங்கள் பிற...

srivatsam

வித்யாரண்ய பாஷ்யம்.—தாநஊர்ஜே ததாதந - உங்க
ரஸத்தை அநுபவிக்கும்படி எங்களை நிலைநிறுத்துங்கள், மஹெ
ரணாய சக்ஷஸே ததாதந - பரதத்வ ஸாக்ஷாத்காரத்துக்கு எ
களை யோக்யராகச் செய்க, (சக்ஷஸெ - பார்க்கத்தக்கதான
இஹ இந்த கார்யத்தில், க்ஷயாய - வாஸத்தினாலே.

விசிஷ்டாத்வைத பாஷ்யம்.—மோக்ஷம் வேண்டுமென்று
கோரும் பரமைகாந்திக்கும் உபாய பூர்த்திவரையில் ஜ்ஞாந
விகாஸமும் அதற்காக தேஹேந்த்ரிய ஸௌக்யமும் வேண்டு
மாகையால் அதற்குக் காரணமாக இங்கு இவன் அந்நத்தைப்
ப்ரார்த்திக்கக் கூடும். ப்ரஹ்ம லோகம் முதலிவை நச்வர
மாகையாலும் கைவல்யம் அல்ப ஸுகமாகையாலும் மிகவும்
மங்களமான ரஸமாவது - பரமாத்மாநுபவமே. அதுவே ஸம்
ஸாரத்துக்கு மருந்து. அடுத்த ஜந்மம் இவ்வாறேன் றறியக்
கூடாமையால் இந்த ஜந்மத்திலேயே மோக்ஷ ஸாதந மான
பக்தியை யுண்டுபண்ண வேண்டுமென்று ப்ரார்த்திக்கை முக்
யார்த்தம். "ரஸோவைஸ:" என்று உபநிஷத்தில் சொல்லு
கையாலே இங்கும் ரஸ மென்று பரமாத்மாவையே சொல்லு
கிறதென்றும் சொல்லலாம். உபாஸந தசையில் ஸாக்ஷாத்காரம்
ஸுகரூபமா யிருக்கு மாகையால் அப்படிப்பட்ட ஸாக்ஷாத்
காரத்தைக் கொடுத்து இந்த ஜன்மத்தில் போஷிக்கவேண்டும்
மோக்ஷத்திலும் அந்த ஸாக்ஷத்காரமே. பரப்ரஹ்மத்துக்கு
ஸ்வாநுபவமும் ப்ரியமானது. ப்ரஹ்மவித்யையுடைய ஜந்
மத்தையே முக்ய ஜந்மமாகச் சொல்லப்பட்டிருப்பதால் ப்ரஹ்ம
வித்யையைப் பெறும்படி செய்வதே ஐகிக்கும்படி செய்வதா
மென்று தாத்பர்யம். எல்லா வஸ்துக்களுக்கும் ஈச்வரன் அந்த
ராத்மாவென்று சொல்லப்பட்டிருப்பதால் இங்கு அபசப்தம்
அதன் அந்தர்யாமியான நாராயணனைச் சொல்லுகிறது. நித்ய
பஹுவசநம் அபசப்தம். ஸர்வ கர்மங்களுக்கும் பலத்தை
கொடுக்க வேண்டியவன் நாராயணனே யாகையாலும், ஸா
ரணமான ஜலங்களுக்கு இவ்வளவு பலம்கொடுக்கச் சக்தி கி
யாதாகையாலும் அப்சப்தத்தால் சொல்லப்படும் பரம
மாவே ஐஹிகாமுஷ்மிக பலங்களைக் கொடுக்கி

srivatsam

அச்சுதாயநம: முதல் கடைசிவரையிலும் மந்த்ரத்தைச் சொல்லித் தீர்த்தத்தை சாப்பிடவேண்டும்.

௭௮. ததிக்ராவ்ண்ண இதி மந்த்ரஸ்ய வாமதேவ ருஷி: அனுஷ்டுப் சந்த: ததிக்ராவா தேவதா ப்ரோக்ஷணே விநியோக: ॥

ததிக்ராவிண்ண: என்னும் மந்த்ரத்துக்கு ருஷி வாமதேவர். சந்தஸ்ஸு அனுஷ்டுப் ததிக்ராவா என்பது தேவதை. ப்ரோக்ஷித்துக்கொள்வதில் இம்மந்த்ரம் விநியோகிக்கப்படும்.

விநியோகம்—இம்மந்த்ரத்தின் ஒவ்வொரு பாதங்களினுலும் ஜலத்தால் சிரஸ்ஸில் ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும். உடனே கீழ்ச்சொன்னபடி 'ஆபோ ஹிஷ்டா மயோபுவ:' என்பது முதலிய பாதங்களால் முன்போல ப்ரோக்ஷணமும் ஜலத்தால் தன்னை ப்ரதக்ஷிணமாய்ச் சுற்றிகொள்வதும் செய்யவேண்டும். இதுவைஷ்ணவர் கிரமம். பெரும்பாலும் ஸமார்த்தக்கிரமும். இதுவே சிலர் ஹிரண்யவர்ண முதலிய சில மந்த்ரங்களால் ப்ரோக்ஷணம் செய்து கொள்ளுகிறார்கள்.

௭௯. ததிக்ராவ்ண்ணோ அகாரிஷம் । ஜிஷ்ணோரஶ்வஸ்ய வாஜிந: ஸுரபி நோ முகா கரத் । ப்ரண ஆயூꣳஷி தாரிஷத் ॥ ஆபோ ஹி ஷ்டா மயோபுவ: । தா ந ஊர்ஜே ததாதந । மஹே ரணாய சக்ஷஸே । யோ வ: ஶிவதமோ ரஸ: தஸ்ய பாஜயதேஹ ந: । உஶதீரிவ மாதர: । தஸ்மா அரம் கமாம வ: யஸ்ய க்ஷயாய ஜிந்வத । ஆபோ ஜநயதா ச ந: ஓம் பூர்புவஸ்ஸுவ: ॥

இந்த மந்த்ரத்திற்கு முன்னே அர்த்தம் இருக்கிறது.

ஜிஷ்ணோ: - ஜயசீலரும் அஶ்வஸ்ய - ஜகத்வ்யாபியும், வாஜிந:- அந்நவானும் ஆகிய, ததிக்ராவ்ண்ண: - ததிக்ராவா என்னும் தேவதைக்கு, அகாரிஷம் - செய்தேன். (அந்த தேவதையைஸ்துதி செய்கிறேனென்று தாத்பர்யம்) ந:-எங்களது, முகா - முகங்களை, ஸுரபி-பரிமளமுடையதாக, கரத் - பண்ணட்டும் ந:- எங்களுடைய, ஆயூꣳஷி - ஆயுஸ்ஸுக்களை, ப்ரதாரிஷத் - உபத்ரமில்லாமல் செய்யட்டும்.

பட்டபாஸ்கர் பாஷ்யம்—தரிப்பதற்கு யோக்ய[illegible] செய்து [illegible]யாலே ததி என்று சொல்லப்படும் ஹவிஸ்ஸு[illegible] மு[illegible] [illegible]றது. காலே

லது காஷ்டங்களை அடைவதால் ததிக்ராவா என்று அக்னிக்குப் பெயர் அக்னி ஒரு ஸமயத்தில் குதிரையின் ரூபத்தை எடுத்துக் கொண்டதால் அச்வஸ்ய என்பதற்குக் குதிரையாகிய என்றே பொருள் கூறலாம். வாஜிநஃ - வேகவானென என்றும் சொல்லலாம். அகாரிஷம், அப்படிப்பட்ட அக்னிக்கு நான் கர்மகரணுக் கடவேன், அவன் ஸூக்ருத ஸ்மிருத்தியால் நமது முகங்களை ஸௌரப்பமுடையதுகளாகச் செய்யட்டும். ப்ரதாரிஷத் விருத்தியாக்கட்டும்.

அத்வைதம்—எல்லா தேவதைகளுக்குள் அக்னி ஒருவனே அன்னத்தைப் புசிப்பவனுகையால். இவனே அன்னத்தை உடையவன். 'அக்னிர்வை தேவாநா மந்நாதஃ' என்று ஶ்ருதி சொல்லுகிறது. வாயுவின் ஸகாவாகையாலே வேகமுடையவன். இம்மந்த்ரம் ஸூர்யபரமென்று சிலர். அப்போது, ததிரவிண்ணஃ லோகயாத்ரையை நடத்துமவனும். வாஜிநஃ-வேகவானு மாகிய ஸூர்யனுக்கு என்று பொருள். மற்றவைகள் முன்போலவே.

வைத்யநாதர்—ததி - தயிர் - அதை அடைவது - தயிரில் அதிகப்ரீதியுடைய தொரு தேவதை ததிக்ராவா என்று சொல்லப்படும்.

srivatsam

விசிஷ்டாத்வைதம் — ஜயஞ் ஞாஜதி ஜமந்திஜயிஞாவா ஸகல ஜகந்நியந்தாவும் ஸகல ஜகதாதாரனும் ஸகல ஜகத்தையும் அளந்தவனுமான நாராயணனே ததிக்ராவா என்று சொல்லப் படுகிறுன். ஜகத்தை அளந்து பலிச்சக்கிரவர்த்தியை ஜயித்ததினுலே அவனே ஜலசீலன். பக்தர் நினைத்தவுடனே அவர்களை ரக்ஷிப்பதற்காக ஓடி வருவதால் இவனே வேக முடையவன், இங்கு முகா என்றது மனதுக்கும் உபலக்ஷணம். மனதும் முகமும் சுத்தமாகப் பெற்றவனுக்கே பகவத் ஸ்தோத்ரத்தில் அதிகாரமாகையால் தன்னை ஸ்தோத்ரம் செய்யும்படி நமது மனதையும் முகங்களையும் பகவான் பரிசுத்தமாகச் செய்யட்டும். ப்ரபந்நனுக்குக் கைங்கர்யமே முக்கியமாகையால் ஆயுஸ்ஸில்லாவிட்டாலும் உள்ள ஆயுஸ்ஸில் வ்யாதி முதலிய உபத்ரவம் இருந்தாலும் ஸ்தோத்ரம் செய்ய ஸாத்தியப் படாதாகையால் ஸ்தோத்ரம் செய்வதற்காக ஆயுஸ்ஸையும் அதில் உபத்திரவம் இல்லாமையும் ப்ரார்த்திப்பதினுல் பரமைகாந்தித்வத்துக்குக்

அதற்குப்பிறகுப் பிராணுயாமம் செய்யவேண்டும். ஸாவித்ர்யா ருஷிஃ விஶ்வாமித்ரஃ தேவீ காயத்ரீ ச்சந்தஃ ஸவிதா தேவதா ॥ ஸாவித்ரிக்கு விச்வாமித்ரர் ருஷி, காயத்ரீ சந்தஸ்ஸு, ஸவிதா தேவதை, இது இப்போது அர்க்ய ப்ரதானத்தில் உபயோகிக்கப்படுகிறது.

அர்க்ய ப்ரதானம் செய்யவேண்டும் மூன்று தடவை தீர்த்தம் விடவேண்டும் ஓம் பூர்புவஸ்ஸுவஃ । ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ நஃ ப்ரசோதயாத் ॥ பிறகுப் பிராணுயாமம் செய்தபிறகு ஒருதடவை விடவேண்டும் அஸாவாதித்யோ ப்ரஹ்ம சொல்லி ஆசமனம் செய்யவேண்டும்.

சிலர் அர்க்ய ப்ரதானத்துக்காக ஸங்கல்பம் செய்துகொள்ளுகிருர்கள். ஸந்த்யோபாஸனம் என்பதே அர்க்ய ப்ரதானமாகையாலும் மற்றவை அங்கமாகையாலும் முதலில் செய்துகொண்டு ஸங்கல்பம் தவிர இங்கு வேறொரு ஸங்கல்பம் செய்துகொள்ளவேண்டிய அவசியமில்லே.

காயத்ரீயே அர்க்ய ப்ரதானத்துக்கு மந்த்ரம். அதற்கு வ்யாக்யானம் மேலே செய்யப்படும். இருகையிலும் ஜலத்தையெடுத்துக்கொண்டு நின்று பெருவிரலும் ஆள்காட்டி விரலும் சேர்ந்தால் ராக்ஷஸ முத்திரை ஆகையால் அதுச்சேர ஒட்டாமல் காயத்ரியை உச்சரித்து புருவம் உயரத்தூக்கி அர்க்யத்தை ஜலத்தில் விடவேண்டும். ஸூர்ய மண்டலத்தின் நடுவில் எழுந்தருளியிருக்கும் பகவானது திருவடிகளில் அர்க்யம் ஸமர்ப்பிப்பதாக இவன் தியானிக்கக்கடவன், முன்னே சிலராக்ஷஸர்கள் கடுமையாகத் தவம் செய்து ப்ரஹ்மாவினிடத்தில் வரம்பெற்று ஸூர்யன் உதயமாம் போதும் அஸ்தமனமாம் போதும் ஸூர்யனுடன் சண்டை செய்கிருர்கள் என்றும் பிராஹ்மணர்கள் ஸூர்யனுக்கு எதிர் முகமாக நின்று காயத்ரியால் மந்த்ரித்த ஜலத்தை உயர எறிகிருர்களென்றும் அந்த ஜலங்கள் மந்த்ர பலத்தால் வஜ்ராயுதமாக ஆய் அந்த ராக்ஷஸர்களை மந்தேஹாருண த்வீபத்தில் தள்ளிவிடுகிறதென்றும் ப்ரஹ்மவரத்தால் அவர்கள் பிழைத்து மறு ஸந்த்யாகாலத்தில் சண்டை [illegible]ங்குகிருர்கள்; என்றும் இவ்வாறு பிரதி ஸந்த்[illegible] நடக்கிறதென்றும் அந்த ராக்ஷஸர்களைப் பிடி[illegible]ராமணர்கள் ஆத்மப்ரதக்ஷிணம் செய்து[illegible]தில் சொல்லப் பட்டிருக்கிறது. காலை முறையே

மாலேச் ஸந்த்யையில் மும்மூன்று அர்க்யம் மத்யாஹ்ந ஸந்த்யையில் இரண்டு அர்க்யம்.

ப்ராதஸ் ஸந்த்யையில் ஸூர்யோதயத்துக்கு முன்னும் ஸாயந்த்ரம் ஸந்த்யையில் ஸூர்யாஸ்தமயத்துக்குமுன்னும் அர்க்ய ப்ரதானம் செய்யவேண்டும். இந்தக்காலம் நடந்து விட்டால் ப்ராயச்சித்தம் செய்ய வேண்டும். அதற்குப் பலப்ராயச் சித்தம் சொல்லப் பட்டது. அவைகளில் முக்கியமானது மற்றொரு அர்க்யம் சமர்ப்பிப்ப தேயாம் இது நாலாவது அர்க்ய மாகையால் துரீயார்க்யம் என்று சொல்லப்படும். ப்ராணாயாமம் செய்து இந்த ஸந்த்யையின் காலதீத ப்ராயச்சித்தத்துக்காக நாலாவது அர்க்ய ப்ரதானம் செய்கிறேனென்றுஸங்கல்பித்துக் கொண்டு முன்போல் இருகையாலும் ஜலத்தையெடுத்து ஸப்தவ்யாருதிகள் காயத்ரிமறுபடி ஸப்தவ்யாஹ்ருதிகள் இதுகளை உச்சரித்து முன்போல ஸமர்ப்பிக்க வேண்டும். இதற்கு மந்த்ரங்கள் பலவாறு பலர் அநுஸந்திக்கிறார்கள்.

க்ரமமான அர்க்ய ப்ரதானம் செய்த பின்பு ப்ராணாயாமம் செய்து ஸங்கல்பித்துக்கொண்டு ப்ராயச்சித்தார்க்யம் ஸமர்ப்பிப்பது வைஷ்ணவர்களின் ஸம்ப்ரதாயம்.

srivatsam

முதலில் அர்க்ய ப்ரதானத்துக்காக ப்ராணாயாமம் செய்த உடனே காலாதீதப்ராயச்சித்தார்க்ய பூர்வமாக இந்தசந்த்யையில் அர்க்ய ப்ரதானம்செய்கிறேன் என்று ஸங்கல்பித்துக் கொண்டு வ்யாஹ்ருதி சிரஸுகளுடன் கூடிய காயத்ரியால் முதலில் பிராயச்சித்தார்க்யம் ஸமர்பித்துப் பின்பு காயத்ரியால் க்ரமமான அர்க்ய ப்ரதானம் செய்யவேண்டுமென்று க்ருஷ்ண பட்டர் சொல்லியிருக்கிறார்.

பின்பு வ்யாஹ்ருதி த்ரயத்தால் ஜலத்தால் தன்னைச் சுற்றி ப்ரதக்ஷிணம் பண்ணி கொள்ளவேண்டும். முன் சொன்ன மந்தேஹ நிரஸன பாபத்துக்கு ப்ராயச்சித்தமாகத் தன்னைத் தான்சுற்றிக்கொள்ள வேண்டும் பின்பு.(அஸாவாதித்யோ ப்ரஹ்ம) அஸள இந்த ஆதித்ய:- ஸூர்யனே, ப்ரஹ்ம பரப்ரஹ்மம் என்று ஸூர்யனை த்யானிக்கவேண்டும். இருந்தா

விசிஷ்டாத்வைதம்— இங்கு ஆதித்யசப்தத்தால் ஸ்தோத் (ஆஸாதித்யவாஸ:, ஸூர்யமண்டலத்தில் வாஸம்செய்பவம் இல்லானைச் சொல்லுகிறது, 'ப்ரஹ்ம மரிப்ருடக் ஏகாந்தித்வத்துக்குக் கர் நிர்வசநம்செய்தபடி எல்லாவிதத்தி

ப்ரஹ்மமாய் அதாவது ஸ்ரீமந்நாராயணனேபரமாத்மா. அவனே ஸூர்ய மண்டலத்தில் இருப்பவன்.

அய்யன் ஸ்வாமி பாஷ்யம். ஆதித்ய-பதத்திற்கு ஸ்ரீமந்நாராயணனே சூர்யரூபியாயிருக்கிறான்.

அதற்கு பின்பு ஆசமனம் செய்து தர்ப்பணம் செய்யவேண்டும். மார்கழி முதலிய பன்னிரண்டு மாஸங்களும் கேசவன் முதலியபன்னிரண்டு மூர்த்திகள் அதிஷ்டானதேவதைகள். அவைகளைக்குறித்து தர்ப்பணம் செய்யவேண்டும்.

ஸ்மார்த்தர்கள் கேசவாதிகளுக்கு முன்னே நவக்கிரஹ தர்ப்பணம் செய்து அதன்பின்பு கேசவாதி தர்ப்பணம் செய்கிறார்கள்.

உ-ம். ஆதித்யம் தர்ப்பயாமி, ஸோமம் தர்ப்பயாமி, அங்காரகம் தர்ப்பயாமி, புதம் தர்ப்பயாமி, ப்ருஹஸ்பதிம் தர்ப்பயாமி, சுக்ரம் தர்ப்பயாமி, சனைச்சரம் தர்ப்பயாமி, ராஹும் தர்ப்பயாமி, கேதும் தர்ப்பயாமி, கேசவம் தர்ப்பயாமி, இத்யாதி ||

அஸாவாதித்யோ ப்ரஹ்ம என்று தியானம் செய்தபின்பு ஆசமனம் செய்து பிராணாயாமம்பண்ணி 'மமோபாத்த துரிதக்ஷயத்வாரா பரமேச்வர ப்ரீத்யர்த்தம் ப்ராத:ஸந்த்யாங்க தர்ப்பணம் கரிஷ்யே', பாபங்கள் நீங்குவதற்காகவும் பரமேச்வரனது ப்ரீதிக்காகவும் காலைச் சந்தியையின் அங்கமாகிய தர்ப்பணத்தைச் செய்கிறேனென்று ஸங்கல்பித்துக்கொண்டு ஸந்த்யாம் தர்ப்பயாமி, காயத்ரீம் தர்ப்பயாமி, ப்ராஹ்மீம் தர்ப்பயாமி, நிம்ருஜீம் தர்ப்பயாமி, என்று காலையிலும், ஸாயங்காலத்தில், ஸந்த்யாம் ஸாவித்ரீம் வைஷ்ணவீம் நிம்ருஜீம் என்றும் மத்தியாஹ்னத்தில், ஸந்த்யாம் காயத்ரீம் ரௌத்ரீம் நிம்ருஜீம்' என்றும் தர்ப்பணம் செய்யவேண்டுமென்று கிருஷ்ணபட்டர் கூறுகிறார். இது ஸ்மார்த்தர் முறை.

வைஷ்ணவர் ஸ்மார்த்தர் முறை. உ-ம். கேசவம் தர்ப்பயாமி, நாராயணம் தர்ப்பயாமி, மாதவம் தர்ப்பயாமி, கோவிந்தம் தர்ப்பயாமி, விஷ்ணும் தர்ப்பயாமி, மதுஸூதநம் தர்ப்பயாமி, த்ரிவிக்ரமம் தர்ப்பயாமி, வாமநம் தர்ப்பயாமி, ஸ்ரீதரம் தர்ப்பயாமி, ஹ்ருஷீகேசம் தர்ப்பயாமி, பத்மநாபம் தர்ப்பயாமி, தா... தர்ப்பயாமி.

ஆருவ ... ையை சிர ... முறையே

இது தர்ப்பண மந்த்ரம். கேசவனை உத்தேசித்துத் தர்ப்பணம் செய்கிறேன் இந்த ரீதியாய் எல்லாவற்றிற்கும் பொருள் கொள்க.

இப்படி தர்ப்பணம் செய்த உடனே ஆசமனம்செய்து அதுகளை பகவதர்ப்பணமாக செய்யவேண்டும்,

ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணம் - என்றும், ஸர்வம் பகவத்ப்ரீதாய நம: - என்றும், வைஷ்ணவாகளும், ஓம் தத்ஸத் ப்ரஹ்மார்ப்பணம் - என்று ஸ்மார்த்தர்களும் பகவதர்ப்பணம் செய்வார்கள், இவை க்ருஷ்ணனுக்கு ஸமர்ப்பிக்கப் பட்டன. இவை பகவானுக்காராதனமாகக்கடவன. நித்யம் நைமித்திகம் காம்யம் என்று மூன்று விதமான கர்மங்களும் பரப்ரஹ்மத்துக்கு அர்ப்பணமாகக் கடவது. என்பது மூறையே அவற்றின் தாத்பர்யம்.

இனி ஜபம் செய்யும் முறை.

ஜபம் செய்யவேண்டிய இடத்தை வ்யாஹ்ருதித்ரயத்தால் ப்ரோக்ஷித்து ஜபம் ஆரம்பிக்கவேண்டும் மாலைச் சந்தியில் மேற்கு முகமாக உட்கார்ந்தும் மற்ற இரண்டு காலமும் கிழக்கு முகமாக நின்று கொண்டும் ஜபம் செய்யவேண்டும்.

ஶுக்லாம்பரதரம் விஷ்ணும் ஶஶிவர்ணம் சதுர்ப்புஜம் ப்ரஸந்ந வதநம் த்யாயேத் ஸர்வவிக்நோபஶாந்தயே ॥ ஸ்மார்த்தமுறை.

ப்ராணாயாமம் செய்யவேண்டும்.

ஓம். ப்ரணவஸ்ய ருஷிர் ப்ரஹ்ம, தேவீ காயத்ரீ சந்த:, ஸவிதா தேவதா. ப்ராத காலத்திலும், பரமாத்மா தேவதா, சாயங்காலத்திலும் சொல்லவேண்டும். ப்ரணவத்துக்கு ப்ரஹ்மா, ருஷி, தேவீகாயத்ரீச் சந்தஸ்ஸு, பரமாத்மா தேவதை.

இந்த ப்ரணவமானது. அ - உ - ம்.என்னும் மூன்று அக்ஷரங்களால் ஆனது. இந்த ஜீவாத்மா ஸர்வரக்ஷகனான விஷ்ணுவுக்கே சேஷபூதமென்பதும்,ஜீவன் விஷ்ணு லக்ஷ்மீஇருவருக்கும் சேஷபூதமென்பதும் இதன் அர்த்தம்.

ஓம். பூராதி ஸப்த வ்யாஹ்ருதீநாம் அத்ரி ப்ருகு குத்ஸ வஸிஷ்ட கௌதம காஶ்யப ஆங்கிரஸ ருஷய:, காயத்ர்யுஷ்ணிகநு

𑌬𑍃𑌹𑌤𑍀𑌪𑌂𑌕𑍍𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌷𑍍𑌟𑍁𑌪𑍍 𑌜𑌗𑌤𑍍𑌯𑌃 𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿, 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍 𑌵𑌾𑌯𑍁𑌰𑌰𑍍𑌕𑍋 𑌵𑌾𑌗𑍀𑌶𑍋 𑌵𑌰𑍁𑌣𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥

𑌭𑍂𑌃, 𑌭𑍁𑌵𑌃, 𑌸𑍁𑌵𑌃, 𑌮𑌹𑌃, 𑌜𑌨𑌃, 𑌤𑌪𑌃, 𑌸𑌤𑍍𑌯𑌂. இவ்வேழும் ஸப்தவ்யாஹ்ருதிகள் என்று சொல்லப்படும். இவைகள் ஒவ்வொன்றின் முதலிலும் ப்ரணவத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். பூ: என்னும் வ்யாஹ்ருதிக்கு அத்ரிருஷி, காயத்ரீச் சந்தஸ்ஸு, அக்னி தேவதை. புவ: - என்னும் வ்யாஹ்ருதிக்கு ப்ருகுருஷி, உஷ்ணிக்குச் சந்தஸ்ஸு வாயுதேவதை ஸுவ: என்னும் வ்யாஹ்ருதிக்கு குத்ஸர் ருஷி, அநுஷ்டுப் சந்தஸ்ஸு ஸூர்யன் தேவதை மஹ: என்னும் வ்யாஹ்ருதிக்கு வஸிஷ்டர் ருஷி, ப்ருஹதி சந்தஸ்ஸு, ப்ருஹஸ்பதி தேவதை. ஜந: என்னும் வியாஹ்ருதிக்கு கௌதமர் ருஷி. பங்க்திச் சந்தஸ்ஸு வருணன் தேவதை, தப: என்னும் வ்யாஹ்ருதிக்கு காஶ்யபர் ருஷி, த்ரிஷ்டுப் சந்தஸ்ஸு, இந்த்ரன் தேவதை. ஸத்யம் என்னும் வ்யாஹ்ருதிக்கு அங்கிரஸ்ஸு, ருஷி, ஜகதீச் சந்தஸ்ஸு விச்வே தேவர்கள் தேவதை.

srivatsam

𑌓𑌂. 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾, 𑌋𑌷𑌿𑌃 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌃, 𑌦𑍇𑌵𑍀 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌛𑌨𑍍𑌦𑌃, 𑌸𑌵𑌿𑌤𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾 ॥ முன்னே அர்த்தம் சொல்லப்பட்டது.

𑌓𑌂. 𑌶𑌿𑌰𑌸𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌋𑌷𑌿𑌃 𑌅𑌨𑍁𑌷𑍍𑌟𑍁𑌪𑍍 𑌛𑌨𑍍𑌦𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾 ॥

காயத்ரீ சிரஸ்ஸு என்னும் மந்த்ரத்துக்கு ப்ரஹ்மாருஷி அனுஷ்டுப் சந்தஸ்ஸு, பரமாத்மாவே தேவதை-

𑌓𑌂. 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑍇 𑌵𑌿𑌨𑌿𑌯𑍋𑌗𑌃 ॥

ப்ரணவம் ஸப்தவ்யாஹ்ருதிகள் காயத்ரீ, காயத்ரீ சிரஸ்ஸு இவைகள் ப்ராணாயாமத்தில் விநியோகிக்கப் படுகின்றன. இப்படி ந்யாஸம் செய்தபிறகு வ்யாஹ்ருதிகளை அங்கங்களில் ந்யாஸம் செய்யவேண்டும்.

முதல் வ்யாஹ்ருதியைப் பாதங்களிலும், இரண்டாவது வ்யாஹ்ருதியைக் கணைக்கால்களிலும், மூன்றாவது வ்யாஹ்ருதியை முழங்கால்களிலும், நாலாவது வ்யாஹ்ருதியை வயிற்றிலும், ஐந்தாவது வ்யாஹ்ருதியை மார்பு, அல்லது கண்டத்திலும் ஆறாவது வ்யாஹ்ருதியை முகத்திலும், ஏழாவது வ்யாஹ்ருதியை சிரஸ்ஸிலும் ந்யாஸம் செய்யவேண்டும். மேல் சொல்லும் முறையே வ்யாஹ்ருதிகளைத் தியானம் செய்யவும்.

௧௮. ஶ்வேத ஶ்யாம பீத விஶும்ப லோஹித நீலகநகவ ணாம் சஹயாக்ஷஸ் ஸூத்ர வரத ஹஸ்தா ஸ்ருவமித்ர வரத ஹஸ்தாம் ஸ்ருக்குந்த நாநாவிதம் க்ருதாம் ஸர்வாபரண பூஷிதாம் ஸோபவீதாஸ் ஜடாஸ்ராக்வா ॥

ஒவ்வொரு வ்யாஹ்ருதியும் நாலு கைகளும், அந்தகைகளில் பவித்ரமும், அபயமுத்திரை அக்ஷமாலே, ஜலபாத்ரம், வரதானமுத்திரை, இவைகளும் தரித்து, சந்தநம் மாலே, இதுகளால் அலங்கரிக்கப்பட்டு. எல்லா ஆபரணங்களும் அணிந்து, உபவீதம் ஜடை இதுகளோடு இருப்பதாகவும், அவை முறையே வெளுப்பு, கறுப்பு, மஞ்சள், பிங்கவர்ணம், செகப்பு, நீலம், ஸ்வர்ணவர்ணம், இந்த நிறத்தோடிருப்பதாகவும் தியானித்து, காயத்திரியின் ஒவ்வொரு பாதத்தையும் இரண்டாகப்பிரித்துஆறு பாகமாக்கிக்கொண்டு மார்பு, சிரஸ்ஸு. சிகை. தோள்கள், கால்கள், திக்கு, விதிக்குகள், இவைகளில் ந்யாஸம் செய்வது. அத்துடன் ஹ்ருதயாதி அங்க மந்த்ரங்களைக் கூட்டிக்கொள்க. தத்ஸவிதுः, ஜ்ஞாநாய ஹ்ருதயாய நமः, வரேண்யம் வேதஸ்ரூபாய ஶிரஸே ஸ்வாஹா, பர்கோ தேவஸ்ய, ஶிகாயை வஷட், தீமஹி பலாய கவசாய ஹும், தியோ யோ நः, தேஜஸே நேத்ராப்யாம் வௌஷட், ப்ரசோதயாத், வீர்யாயாஸ்த்ராய பட்.

இது ஷடங்க ந்யாஸமந்த்ரம். இந்த ஷடங்க ந்யாஸமானது ஷடங்கு முத்திரைகளால் செய்யத்தக்கது, அதுகளை குருமுகமாய்த் தெரிந்து கொள்வது. பிறகு காயத்ரியை மேல் சொல்லுகிற முறையே தியானம் செய்க.

௧௯. முக்தாவித்ரும ஹேமநீலதவளச் சாயைர் முகைஸ் த்ரீக்ஷணைர் யுக்தாமிந்து நிபத்த ரத்ந மகுடாம் தத்வார்த்த வர்ணாத்மிகாம் । காயத்ரீம் வரதாபயாங்குஶ கஶாஶ்ஶுப்ரம் கபாலம் குணம் ஶங்கம் சக்ரமதாரவிந்த யுகளம் ஹஸ்தைர் வஹந்தீம் பஜே ॥ ஸ்மார்த்தமுறை.

கிரீடத்தில் சந்திரன், ஐந்து முகங்கள், ஒவ்வொரு முகத்திலும் மும் மூன்று கண்கள், முகங்கள் முறையே முத்து, பவழம், பொன், நீலம் வெளுப்பு, இந்தகாந்தி யுடையது, பத்துகைகள், கைகளில் முறையே, வரதான முத்திரை. அபயமுத்

srivatsam

திரை, அங்குசம், கசை (கொரடா) வெளுப்புக் கபாலம், கபிறு சங்கம்-சக்கிரம்: இரண்டு தாமரைப்பூ, இவைகள் தரித்திருப்ப வள், ஸர்வதத்வஸ்வரூபிணி, ஸர்வார்த்தரூபிணி. ஸர்வாக்ஷரரு பிணி, இப்படிப்பட்ட காயத்திரியை நான் ஸேவிக்கிறேன். என் று அஞ்சலி செய்து காயத்ரீ சிரஸ்ஸால் சிரஸ்ஸு முதல்பாதம் வரையில் வ்யாபகந்யாஸம் செய்ய வேண்டும், பிறகு காயத்ரீ ப்ரதிபாத்யமான தேவதையை ஸ்துதி செய்யவேண்டும்.

ஓம். ஸூர்யமண்டலமத்யஸ்தம் ஸூர்யகோடி ஸமப்ரபம் ।
ப்ரஹ்மாதி ஸேவ்ய பாதாப்ஜம் நமாமி ப்ரஹ்மரூபிணம் ॥

சூர்ய மண்டல மத்தியத்தில் இருப்பவரும், கோடி ஸூர்ய ர்களுக்கு ஸமானமான காந்தி யுடையவரும்: ப்ரஹ்மா முதலிய வர்களால் ஸேவிக்கத்தக்க பாதகமலத்தை யுடையவரும், பரப் ரஹ்ம ரூபியுமாகிய ஸ்ரேயஃபதியை நான் ஸ்தோத்திரம் செய்கி றேனென்பது இதன் பொருள்.

பிறகு முறைப்படி மூன்றுப்ராணாயாமம் செய்யவேண்டும்.

அத்வைதம்—ஸப்த வ்யாஹ்ருதிகளுக்கும் முறையே ஸப்த லோகங்கள் அர்த்தம்.

விசிஷ்டாத்வைதம்—வ்யாஹ்ருதிகளினால் த்யாநிக்கப் பட வேண்டியவன் ஸர்வஜகத்காரணனான நாராயணனே.

ஓம். ஆபோ ஜ்யோதீ ரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவ ஸ்ஸுவரோம் ॥ இது காயத்ரீ சிரஸ்ஸு.

அய்யன் ஸ்வாமிபாஷ்யம்—ஆபஃ - ஜலங்களும். ஜ்யோதிஃ அக்கினியும், மற்றபூதங்களும், ரஸஃ-ரஸம் முதலிய விஷயங்க ளும், அம்ருதம், காலமும் ப்ரஹ்ம - ப்ரக்ருதியும், பூஃ - பூலோக மும், புவஃ - புவர்லோகமும், ஸுவஃ - ஸுவர்லோகமும், ஓம் - ப்ரஹ்ம ஸ்வரூபமானது. எல்லா வஸ்துக்களும் பரமாத்மாவினி டத்திலேயே என்பது தோன்ற இதன் முதலிலும் முடிவிலும் ப்ரணவம் சேர்க்கப்பட்டது.

வைத்யநாதர்—அகாரம் உகாரம் மகாரம் மூன்றும்சேர்ந்த ப்ரணவத்திற்கு விஷ்ணு சிவன் ப்ரஹ்மா என்னும் த்ரி மூர்த் ஸ்வரூபியான பரமாத்மா அர்த்தம். பூஃ - ஸத்தை, அதுவும் பரமாத்மாவே, புவஃ - எல்லாவற்றிற்கும் ஸ்திதிகாரணமும் பர ... ஸுவஃ - ஸநகாதிகளால் நன்றாக வரிக்கப்படுவது

அல்லது ஸர்வத்தையும் வ்யாபித்திருப்பதும் பரமாத்மாவே, மஹஃ - முமுக்ஷுக்களால் பூஜிக்கப்படுவதும் பரமாத்மாவே, ஜநஃ - எல்லா ஜகத்தையும் ஜனிப்பித்ததும் பரமாதமாவே. ஸத்யம் - எக்காலத்தும் எப்பிரமாணத்தாலும் பாதிக்கப்பட்டதாக கார்ய காரண வஸ்துக்கள் யாவும் பரமாத்மாவே. ஆபஃ - ஸர்வ வ்யாபி பரமாத்மாவே, ஜ்யோதிஃ — ஸ்வப்ரகாச சைதந்ய ஜ்யோதி ஸ்வரூபமானது பரமாத்மாவே, ரஸஃ - அதுவே. ஆனந்தஸ்வபாவம், அம்ருதம் - இறப்பில்லாதது அதுவே, பரஹ்ம் அதுவே ப்ரப்ரஹ்ம ஸ்வரூபம், பூஃ - ஜகத்துக்களின் உத்பத்திக்குக் காரணம் அதுவே. புவஃ - அவைகளின் ஸம்ஹாரத்திற்குக் காரணம் அதுவே, ப்ரணவங்களோடு கூடிய ஸப்த வ்யாஹ்ருதிகள் ப்ரணவத்தோடு கூடிய காயத்ரீ - ப்ரணவத்தோடு கூடிய சிரஸ்ஸு, இவைகளால் சொல்லப்படுகிற அகண்டரஸ ஸ்வபாவமான பரப்ரஹ்மத்தையே ப்ரத்யகாத்மாவாக அனுமதி செய்கிறேனென்பது கடைசி ப்ரணவத்தின் அர்த்தம்.

கிருஷ்ணபட்டர்—பூஃ முதலிய லோகங்கள் ஏழும் பரமாத்மாவே, பரமாத்மா தவிர வேறொன்றும் உண்மையில் கிடையாது. கண்ணுக்குப் புலப்படுமவை முழுதும் மாயையே, ஸ்வப்னத்தில் காணுமவை யெல்லாம் தூக்க காலத்தில் உண்மை போல் புலப்பட்டாலும் தூக்கம் விழித்த உடனே அவை யில்லை யென்று உண்மை வெளிப்படையாய் விளங்குவதுபோல் அஞ்ஞான தசையில் பல பொருள்களின் தோற்றம் உண்டானுலும் ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யமான தென்றும் ஜ்ஞானம் பிறந்த உடனே அவையெல்லாம் மாயை யென்பது நன்கு விளங்கும். ஆபஃ ஜலமும் ப்ரஹமமே, ஸூர்யன் முதலிய தேஜஸ்ஸுகளும் ப்ரஹ்மமே, ரஸமும் ப்ரஹ்மமே. தேவதைகளுக்கு ஆகாரமான அம்ருதமும் ப்ரஹ்மமே, ப்ரஹ்ம சாமவேதம், அதுவும் ப்ரஹ்மமே.

அய்யன் ஸ்வாமி பாஷ்யம்—அம்ருதம் ப்ரஹ்ம - முக்தாத்மாக்கள். இங்கு சொல்லப்பட்டன எல்லாம் ப்ரமாத்மசரீரமே. காயத்ரியின் அர்த்தம் பின்னுல் விவரிக்கப்படும்.

விநியோகம், இவைகள் எல்லாம் ப்ராணாயாமத்தில் வி[illegible] யோகப்பட்டன. இப்படி ப்ராணாயாமம் செய்த பிற[illegible] ப்ராதஸ்ஸந்த்யாம் காயத்ரீம் ருக்ஜவம் குமாரீம் காலைச் [illegible]

srivatsam

யையில் காயத்ரி மந்த்ரத்தின் ஜபத்தைச் செய்கிறேன் என்று ஸங்கல்பித்துக் கொண்டு.

௧௭. ஆயாத்வித்யநுவாகஸ்ய, வாமதேவ ருஷி:, அநுஷ்டுப் சந்த:, காயத்ரீ தேவதா, காயத்ர்யாவாஹநே விநியோக:

ஆயாது என்றும் அநுவாகத்திற்கு வாமதேவர் ருஷி, அனுஷ்டுப் சந்தஸ்ஸு, காயத்ரீ தேவதை. இது காயத்ரியை ஆவாஹநம் செய்ய விநியோகிக்கப்பட்டது. என்று முறையே ந்யாஸம் செய்த பிறகு ஆயாது என்னும் அனுவாகத்தால் ஹ்ருதயகமலத்தில் காயத்ரியை ஆவாஹநம் செய்யவேண்டும்.

௧௮ ஆயாது வரதா தேவி, அக்ஷரம் ப்ரஹ்ம ஸம்மிதம், காயத்ரீம் சந்தஸாம் மாதேதம் ப்ரஹ்ம ஜுஷஸ்வ ந:, ஓஜோஸி ஸஹோஸி பலமஸி ப்ராஜோஸி தேவாநாம் தாமநாமாஸி விச்வமஸி விச்வாயு: ஸர்வமஸி ஸர்வாயுரபிபூரோம் காயத்ரீமாவாஹயாமி

வரதா - தன்னை அடைந்தவர்களுக்குஸர்வாபீஷ்டங்களையும் கொடுப்பவளும், அக்ஷரம் - நித்யையும், ப்ரஹ்மஸம்மிதம் - ப்ரணவத்துக்கு ஸமானமானவளும், சந்தஸாம்மாதரம் - எல்லாச் சந்தஸ்ஸுகளுக்கும் ப்ரதான பூதையும் ஆகிய, காயத்ரீம் காயத்ரி என்கிற தேவீ-தேவதையானது. ஆயாது - இங்கேவரவேண்டும், ந:-எங்களுடைய, இதம்ப்ரஹ்ம-ஸ்தோத்ரரூபமான இந்த வேதவாக்யத்தை, ஜுஷஸ்வ-ஓகாயத்ரியேநீ அங்கீகரிக்கக்கடவை, ஓஜ:அஸி நீயே இந்திரியங்களின் சக்தியா யிருக்கிறாய், ஸஹோஸி-நீயே வேகமாயிருக்கிறாய், பலமஸி- நீயேபலமாயிருக்கிறாய், ப்ராஜோஸி - நீயே ப்ரகாசமாயிருக்கிறாய், தேவாநாம் - தேவதைகளுடைய, நாம - ப்ரஸித்ரமான, தாமாஸி- தேஜஸ்ஸாயிருக்கிறாய், விச்வமஸி - நீயே எல்லாமாயிருக்கிறாய், விச்வாயு: - எல்லாவற்றின் ஆயுஸ்ஸையும் விருத்திசெய்பவளாயிருக்கிறாய்; ஸர்வமஸி, உன்னிடத்தில் ப்ரீதிசெய்யும் வஸ்துக்களை நிர்வஹிப்பவள். நீயே ஸர்வாயு: - காலவிசேஷங்களை வ்யவஸ்தை செய்பவள் நீயே அபிபூ: - ஸகலபாபங்களையும் போக்குமவள் நீயே; இப்படிப்பட்ட, காயத்ரீம் - காயத்ரியை, ஓம் - ப்ரணவஸ்வரூபியாக ஆவாஹயாமி - நான் ஆவாஹநம் செய்கிறேன்.

srivatsam

அய்யன் ஸ்வாமி பாஷ்யம்—காயத்ரியால் ப்ரதிபாதிக்கப் படுகிற பரப்ரஹ்மத்துக்கு ஸமானமானது அக்ஷரம்; வர்ணரூப மான ப்ரஹ்மம், ஓஜ: - காந்தி, ஸஹ:-ஸாமர்த்யம்; இவைமுதலியவைகளுக்கு ஸாதனமாயிருக்கிறாய். நாமாஸி-பேராயிருக்கிறாய், விஸ்வாயு: - எல்லாவற்றிற்கு மாயுஸ்ஸுக்கு ஸாதகமாயிருக்கிறாய். அபிபூ: - சத்துருக்களைத் திரஸ்காரம் செய்கிறவளாயிருக்கிறாய், ஓம் - ப்ரஹ்ம ஸ்வரூபிணியா யிருக்கிறாய்.

நாராயண ஸ்வாமி பாஷ்யம்—ப்ரஹ்ம - வேதம் - காயத்ரி ஸகல வேத ஸமானம். அல்லது. ப்ரஹ்ம - ப்ரணவம் போலே எல்லா அர்த்தங்களையும் ஸ்ருங்கச் சொல்லுவது. அல்லது ப்ரஹ்ம் பரப்ரஹ்மம்; அது ஸகல ஜகத்காரணமாயிருப்பது போல் ஸகலவாங்மயங்களுக்கும் மூலமான வேதத்துக்கு மாத்ரு ஸ்தாநீயமானது, பலம் - பரிக்கும் சக்தி, விச்வம் விஷ்ணுவிஷ்ணுபோலே எல்லாவற்றையும் ஆக்ரமிக்கும் வல்லமையுடையது. இங்கு சொல்லுவது காயத்ரியின் அதிஷ்டான தேவதையை காயத்ரியால் ப்ரதிபாதிக்கப் படுவது பரமாத்மாவே

வைத்யநாதர்—தேவி - ப்ரகாசிக்கும் ஸ்வபாவம் உடையவள், ஸம்மிதம் - தத்வஜ்ஞான ஸ்ரூபமானவள். இதம் - கீழ்ச்சொன்ன அகண்டாநந்த ஸமான பரப்ரஹ்மத்தை, ஜுஷஸ்வ - அடைவிக்கக் கடவாய். ஸஹ: - பராபவசக்தி - ப்ரளயாதி காலங்களில் எல்லாவற்றையும் பராபவம் செய்யும் சக்தியுடையது. விச்வம் இப்போது கண்களுக்குப் புலப்படுவது. ஸர்வம்-வேறுஸ்ருஷ்டியில் உள்ளவை - எல்லாம் காயத்ரியே.

கிருஷ்ணபட்டர் - நித்யாநந்த ஸ்வரூபிணீ; ஸம்மிதம்-வேதாந்த ப்ரமாணத்தால் அறியப்பட்டது; ப்ரஹ்ம - பரமாத்மா நீயே, காயத்ரீ - காயத்ரீச் சந்தஸ்ஸின் அபிமானிதேவதை; இதம் ப்ரஹ்ம - நான் செய்யும் ஸ்தோத்ர ரூபமான இந்த தபஸ்ஸை, ஜுஷஸ்வ - அங்கீகரிக்கவேண்டும். விச்வம் - ஸ்தாவரங்கள், ஸர்வம் ஜங்க மங்கள்.

இப்படி ஆவாஹநம் செய்தபின்பு, ப்ராதர்த்யாயாமி காயத்ரீம் ரவிமண்டலமத்யகாம் । ருக்வேதமுச்சாரயந்தீம் ரக்தவர்ணாம் குமாரிகாம் । அக்ஷமாலாகராம் ப்ரஹ்மதைவத்யாம் ஹம்ஸவாஹநாம் । ப்ராத: காலத்தில் காயத்ரி யென்று பெயர். அந்ததேவதை ஸூர்யமண்டலத்தில் இருப்பது. அதை உச்சரிப்பது ருக்வேதம் - வர்ணம் செகப்பு. வயஸ்ஸு பால்யம். கையில் [illegible] மாலை, வாஹனம் ஹம்ஸம். தேவதை ப்ரஹ்மா, இம்முறைப்படி காலையில் தியானம் செய்து ஆஸநம் முதலிய பதினாறு உபசாரங்களையும் மனஸால்ஸமர்ப்பித்து ப்ரணவஸ்ய ருஷிர்ப்ரஹ்மா தேவீ காயத்ரீ ச்சந்த: பரமாத்மா தேவதா.

srivatsam

அர்த்தம் முன்னே சொல்லப்பட்டது.

𑌭𑍂𑌰𑌾𑌦𑌿 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌿𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌯 𑌅𑌤𑍍𑌰𑌿 𑌭𑍃𑌗𑍁𑌕𑍁𑌤𑍍𑌸 𑌋𑌷𑌯𑌃 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑍁𑌷𑍍𑌣𑌿𑌗𑌨𑍁𑌷𑍍𑌟𑍁𑌪𑍍𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿. 𑌅𑌗𑍍𑌨𑌿𑌵𑌾𑌯𑍍𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥

பூः புவः ஸுவः என்னும் மூன்று வ்யாஹ்ருதிகளுக்கும் முறையே அத்ரியும் ப்ருகுவும் குத்ஸரும் ருஷிகள், காயத்ரியும் உஷ்ணிக்கும் அநுஷ்டுப்பும் சந்தஸ்ஸுகள், அக்நியும் வாயுவும் ஸூர்யனும் தேவதைகள்.

𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌋𑌷𑌿𑌃 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌃, 𑌦𑍇𑌵𑍀 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌛𑌨𑍍𑌦𑌃, 𑌸𑌵𑌿𑌤𑌾𑌦𑍇𑌵𑌤𑌾॥ அர்த்தம் முன்னே சொல்லப்பட்டது.

𑌵𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯॥ 𑌜𑌪𑍇 𑌵𑌿𑌨𑌿𑌯𑍋𑌗𑌃.

இவைகளை காலைச் சந்தியையின் ஜபத்தில்
விநியோகிக்கப்பட்டன.

இவைகளை முறைப்படி ந்யாஸம் செய்த பிறகு கரந்யாஸமும் ஷடங்கந்யாஸமும் செய்யவேண்டும்.

அஸ்திர மந்திரத்தால் கைகளின் உட்புறம் வெளிப்புறங்களைத்துடைத்து, காயத்ரியால் சிரஸ்ஸு முதல் பாதம் வரையில் வியாபகந்யாஸம் செய்து ப்ரணவத்தால் மணிக்கட்டு வரையில் கைகளை உட்புறம் வெளிப்புறங்களைத் துடைத்து, இருகைகளிலும் மற்றொரு கையால் ப்ரணவத்தை நியாஸம் செய்து.

𑌓𑌂 𑌭𑍂𑌃 𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃-ஆள்காட்டு விரல்களால்பெருவிரல்களிலும், 𑌓𑌂 𑌭𑍁𑌵𑌃 𑌤𑌰𑍍𑌜𑌨𑍀𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃 ஆள்காட்டுவிரல்களிலும், 𑌓𑌂 𑌸𑍁𑌵𑌃 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃-நடுவிரல்களிலும், 𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂 𑌅𑌨𑌾𑌮𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃-பவித்திரவிரல்களிலும் பெருவிரல் களினுலும், 𑌓𑌂 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃-கடைவிரல்களினுலும், 𑌓𑌂 𑌧𑌿𑌯𑍋 𑌯𑍋 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 𑌕𑌰𑌤𑌲 𑌕𑌰𑌪𑍃𑌷𑍍𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃-கைகளின் உட்புறம் வெளிப்புறங்களில் மறுகையின் உள்ளங்கை களிலும் நிந்யாஸம் செய்வது கரந்யாஸமாம்.

கீழ்ச்சொன்ன ஓம் பூः முதலிய ஆறுமந்திரங்களோடு முறையே ஜ்ஞாநாய ஹ்ருதாய நமः முதலிய ஷடங்க மந்த்ரங்கள் ஆறையுஞ்சேர்த்து மார்பு முதலிய ஆறு அங்கங்களில் ந்யாஸம் செய்வது ஷடங்க ந்யாஸ மாம்.

srivatsam

ஓம். யோ தேவ ஸவிதாஸ்மாகம் தியோ தர்மாதிகோசரா:|
ப்ரேரயேத் தஸ்ய யத் பர்க: தத் வரேண்யம் உபாஸ்மஹே||

தேவ:-தேவதையாகிய, ய: எந்த, ஸவிதா- ஸூர்யனானவன், அஸ்மாகம்-நம்முடைய, திய:-புத்திகளை, தர்மாதிகோசரா:-தர்மம் முதலியவைகளின் விஷயமாக, ப்ரேரயேத்-ஏவுவனோ, தஸ்ய-அவனுக்கு, யத்-எந்த, பர்க: - தேஜஸ்ஸு உண்டோ, வரேண்யம்-ச்ரேஷ்டமாகிய, தத்-அந்த தேஜஸ்ஸை, உபாஸ்மஹே-உபாஸிக்கிறோம்.

இது காயத்ரியின் அர்த்தத்தை ப்ரதிபாதிப்பது.
இது அகஸ்தியரால் செய்யப்பட்ட வசனம்.
இது காயத்ரீ ஸ்தானத்தில் அனுஸந்திக்கத் தக்கது.
இதை அனுஸந்தானம் செய்த பிறகு.

[illegible] | விஷ்ணும் சதுர்ப்புஜம் ரக்தபங்கஜாஸனஸம்ஸ்திதம்|| கிரீடஹாரகேயூரகடகாதி விபூஷிதம் | ஶ்ரீவத்ஸவநமாலாஶ்ரீதுளஸீ கௌஸ்துபோஜ்ஜ்வலம்| ஹரிம் பீதாம்பரதரம் யஜ்ஞோபவீதிநம் [illegible] | ப்ரஸந்நவதநம் ரத்நகுண்டலமண்டிதாநநம் ||ஸர்வரத்நமயஸர்வாபரண பூஷிதம்|

பரமாத்மாவான விஷ்ணு நான்கு கைகளோடும் கிரீடம் ஹாரம் தோள்வளை, வளைகள் ரத்ன குண்டலங்கள் முதலான ஸர்வ ரத்னமயமான ஸர்வபூஷணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, ஸ்ரீவத்ஸம் வநமாலை திருத்துழாய் ஸ்ரீகௌஸ்துபம் இவைகள் ஜ்வலிக்க, மந்தஹாஸமுகமாக ஸூர்யமண்டலத்தில் ரத்ன மயமான தாமரஸ புஷ்பத்தை ஆஸந மாகக்கொண்டு எழுந்தருளியிருப்பதாக தியானித்துக் கொண்டு காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். "இது ஒருமுறை" ஜபத்துக் காரம்பிக்கும் போதே ப்ராணயாமம் செய்து ஜபத்தை ஸங்கல்பித்துக் கொண்டு ப்ரணவம் ஸப்த வ்யாஹ்ருதிகள் காயதிரீ காயத்ரீ சிரஸ்ஸு இவைகளின் ருஷிச் சந்தோ தேவதா நியாஸம் செய்து "ச்வேத ச்யாம" "முக்தாவித்ரும" "அர்க்கமண்டல" இந்த தியானங்களைச்செய்து ப்ராணயாம மந்திரத்தால் பத்து உருஜபம்செய்து, மறுபடி ஒரு ப்ராணயாமம் செய்து," ஆயாத்வித்யநுவாகஸ்ய" என்பது முதல் முன்போல் செய்து ஜபம் செய்வது மற்றோர் முறை.

ஸப்தத்வீபா:-ப்ரஹ்மலோகாதி ஶேஷாந்தா லோகாலோகா: ஸபர்வதா: । யே வஸந்தி த்விஜா தேவா தேப்யோ நித்யம் நமோ நம: ॥ ப்ரஹ்மலோகம் முதல் ஆதிசேஷன் வரையில்லோகாலோகபர்வதச் சுற்றளவில் உள்ள எல்லா தேவதைகளையும் எல்லா ப்ராஹ்மணர்களையும் நமஸ்கரிக்கிறேன். ஆசார்ய பித்ரு சரணாரவிந்தாப்யாம் நம:, ஶ்ரீ குருப்யோ நம: ॥ தாய் தகப்பனர் பாதங்களுக்கு நமஸ்காரம். நமது ஆசார்யர்களுக்கு நமஸ்காரம் என்று நமஸ்காரம்செய்து ஸர்வே விக்நகரா பூதா யே பூதா பூவி ஸம்ஸ்திதா: ॥ யே பூதா விக்நகர்தாரஸ்தே நஶ்யந்து ஶிவாஜ்ஞயா ॥ ஸ்மார்த்தர் கிரமம்.— பூமியிலும் இதர ஸ்தலங்களிலும் விக்னம் செய்யும் ஸ்வபாவத்தோடு வாஸம்செய்யும்எல்லா பூதங்களும்சிவனது ஆக்கினையால் நசிக்கக்கடவன என்று ப்ரார்த்தித்து வலது கைப்பெருவிரல், ஆள் காட்டு விரல்களால் ஜப பூமியில் சோடிகை செய்து ப்ராணாயாமம் செய்து ஜபத்துக்கு ஸங்கல்பம் செய்து கொண்டு ப்ரணவம் ஸப்தவ்யாஹ்ருதிகள் காயத்ரீ காயத்ரீ சிரஸ்ஸு இவைகளின் ருஷ்யாதிந்யாஸம் செய்து, பத்து ப்ராணாயாமம் செய்து "ஆயாது" என்னும் மந்த்ரத்தால் ருஷிச்சந்தோ தேவதாந்யாஸத்தோடு காயத்ரியை ஆவாஹநம் செய்து, காயத்ரியின் ருஷிச்சந்தோ தேவதைகளை ந்யாஸம் செய்து காயத்ரியின் ஒவ்வொரு பாதத்தையும் கீழ்ச்சொன்னபடி இரண்டாகப் பிரித்து முறையே அங்குஷ்டாப்யாம் நம: முதலியவைகளைக் கூட்டி கரந்யாஸமும், ஜ்ஞாநாய ஹ்ருதயாய நம: முதலியவைகளைக்கூட்டி ஷடங்க ந்யாஸமும் செய்து "முக்தாவித்ரும" என்று காயத்திரியைத் தியானம் செய்து கிரமப்படி காயத்ரி ஜபம் செய்து, மறுபடி ப்ராணாயாமம் செய்து காயத்ரியின் ருஷிச்சந்தோதேவதாந்யாஸமும் கரந்யாஸம் ஷடங்கந்யாஸம் இதுகளும் செய்யவேண்டும். இது, ஸ்மார்த்தர் கிரமம், காயத்திரியின் அக்ஷரந்யாஸக் கிரமம், விஸ்தாரமாக வைத்யநாத தீக்ஷிதரால் ப்ரமாண பூர்வமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜபம் செய்யும் முன்னே ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம என்கிற காயத்ரீ ஹ்ருதயத்தைப் படிக்க வேண்டுமென்றும் கிருஷ்ண பட்டர் சொல்லுகிறார்.

ஜபத்திற்குப் பலவிதமாலைகள் சொல்லப்பட்டாலும் காயத்ரீ ஜபம் கைவிரல் கணுக்களில் எண்ணிக் கொண்டே செய்ய

வேண்டுமென்றும், காலைச்சந்தியை காயத்ரி ஜபத்தில்முகத்தையும் கைகளையும் மூடிக்கொள்ள வேண்டு மென்றும், மற்ற எல்லா ஜபங்களிலும் கைகளை மாத்திரம் மூடவேண்டுமென்றும் காயத்ரியை பாதம் பாதமாகப் பிரித்து ப்ரணவத்தில் ஒன்று, வ்யாஹ்ருதி த்ரயத்தின் முடிவில் ஒவ்வொன்முக மூன்று இப்படி ஐந்து இடங்களில் நிறுத்தி ஜபம் செய்யவேண்டும் என்றும் சப்தம் உச்சரிப்பது அயலாருக்குக் கேளாமலும் உதடு அசையாமலும் மனதிற்குள்ளேயே காயத்ரியை ஆவர்த்தனம் செய்வது மான ஸஜபமென்றும், அதுதான்முக்கிய மென்றும்; பிரதி காலத்திலும் (1008) உரு ஜபிப்பது முக்கிய மென்றும், (108) உரு ஜபிப்பது மத்தியமம் என்றும், (10) உரு ஜபிப்பது அதமம் என்றும், ப்ரஹ்ம சாரியும் கிரஹஸ்தனும் (108) உரு ஜபிப்பது போது மென்றும், எண்ணிக்கை யில்லாமல் செய்யும் ஜபம் வீண் என்றும், வ்யாஹ்ருதிகளுடன் சேர்ந்தே காயத்ரீ ஜபம் செய்ய வேண்டு மென்றும், கிரஹஸ்தனும் ப்ரஹ்ம சாரியும் ஒரேப்ரணவத்தோடு ஜபம் செய்யவேண்டு மென்றும் ஸந்யாஸி ஆத்தியந்த ப்ரணவமாயாவது, ஆறுப்ரணவத்தோடாவது ஜபம்செய்யவேண்டு மென்றும், காலைஜபத்தில் மூக்குக்குச் சரியாகவும், மத்தியாஹ்ந ஜபத்தில்மார்புக்குச் சரியாகவும், ஸாயங்கால ஜபத்தில் நாபிக்குச் சரியாகவும், காலையில் மேல் முகமாகவும், மத்தியாஹ்நத்தில் நடுநிலையாகவும், மாலையில் கீழ் முகமாகவும் கை கால்வைக்கப்பட்டு ஜபம் செய்யவேண்டு மென்றும், கையில் பவித்திர மில்லாமலும் கைகளை மூடாமலும் தலையை மூடிக்கொண்டும் ஜபம் செய்யக் கூடாதென்றும், ஈரவஸ்த்ரத்தோடு காயத்ரீ ஜபம் செய்யக்கூடாதென்றும், ஜலத்தில் காயத்ரீ ஜபம் செய்யக்கூடாதென்றும், இவை முதலிய பல ஜப நியமங்கள் தர்ம சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த ஜபத்துக்கும் மௌனவ்ரதம் முக்கியமானது. ஜபமத்தியில் குருவாவது பூஜிக்கத்தக்க ஸ்ரீ வைஷ்ணவர்களாவது ச்ரோத்திரியர்களாவது வந்தால் அவர்களை ப்ரணமம் குசலப்ரச்னம் முதலியவைகளால் உபசரித்துப் பின்பே முறைப்படி ஜபம் செய்யவேண்டும்.

இனி காயத்ரியின் அர்த்தம் சொல்லப்படுகிறது. ഗായംതം த்ராயதெ - ஐதி ഗായത്രീ. தன்னை ஜபிப்பவனை ரக்ஷிப்பதனால் இதற்கு காயத்ரீ என்றுபெயர். இது மூன்று பாதம், பாதமொ

ன்றுக்கு எட்டக்ஷரம், ஜபகாலத்தில் வரேணியமென்றும் மற்ற காலங்களில் வரெண்யம் என்றும் அநுஸந்திக்கக்கடவது.

நாராயணஸ்வாமி பாஷ்யம்.—தேவஸ்ய-சேதநா சேதநஸ்வரூபமான ஜகத்க்ரீடையினால் ஸந்தோஷித்துக் கொண்டிருக்கிற, ஸவிதுஃ-ஸகலஜகத் ஸ்ரெஷ்டமான, பரமாத்மாத்ம ரூபி நாராயணனுடைய, வரேணியம்-மஹாத்மாக்கள் எல்லாராலும் ப்ரார்த்திக்கக்கூடிய, தத்-அப்படி ப்ரஸித்தமான, பர்கஃ - தேஜஸ்ஸை, தீமஹி-தியாநிக்கக்கடவோம். அக்ஞாநாந்தகார மனைவற்றையும் போக்குவதால் தேஜஸ்ஸப்தத்தால் சொல்லத்தக்கவரும். எல்லாக்கர்மங்களி னுடையவும் பலபாகத்துக்குக் காரணமாகையால், அல்லது ஸர்வத்தையும் பரிப்பதால் பர்க்ஸ் என்று சொல்லத் தக்கவரும் ஆகிய ஸூர்ய மண்டலாந்தர்வர்த்தியான தேஜோரூபியான புருஷோத்தமனைத் தியானம் செய்கிறேனென்று தாத்பர்யம். தலை என்னும்பாகமே ராஹுவாயிருக்க ராஹுவின் தலையென்பது போல் தேவனே பர்க்கஃ ஆயிருக்க தேவஸ்யபர்கஃ - என்பது ஔபசாரிக ப்ரயோகம். யஃ - எந்த தேஜஸ்ஸானது, நஃ - நமக்கு, தியஃ - கைப்பிடிக்கவேண்டியவை விடவேண்டியவை இவைகள் விஷயமாய் உபாயாநுஷ்டாநத்துக்கு வேண்டிய ஜ்ஞாநங்களை, ப்ரசோதயாத்-உண்டுபண்ணுமோ? "காரணந்துத்யேயஃ"-என்று ஜகத்காரண பூதனானவனே உபாஸிக்கப் படவேண்டு மென்று சொல்லுகையால் தைலதாரை போல் இடைவிடாத த்யாநமென்னும் பக்தி யோகத்தைத் தன் அநுஷ்டாந முகமாக இந்த காயத்ரியால் காட்டினதாகிறது.

அய்யன் ஸ்வாமி பாஷ்யம்.— யஃ-எந்த தேஜஸ்ஸு, நஃ-நமது, தியஃ-தூங்குகிற க்ஞாநேந் திரியங்களை, ப்ரசோதயாத் - எழுப்பி நடத்துகிறதோ, தத்-அந்த வரெண்யம் - உபாஸிக்கத் தக்க, ஸவிதுஃ - ஜகத்காரண பூதனான, தேவஸ்ய - ஸ்வாமியினுடைய, பர்கஃ - தேஜஸ்ஸை, ப்ரமாத்மஸ்வரூபத்தை, தீமஹி- த்யாநிக்கக் கடவோம்.

வைத்யநாத் தீக்ஷிதர்.—யஃ-எவர், நஃ-நமது, தியஃ-புத்தி விருத்திகளை, ப்ரசோதயாத்-ப்ரேரிக்கிறாரோ? தத்-அப்படி புத்தி சாலிகளைப் ப்ரேரிக்குமவரான, ஸவிதுஃ-ஸர்வஜகத்காரண பூதராகிய, தேவஸ்ய-ஸ்வயம் ப்ரகாச ஸச்சிதாநந்தகா ஸ்வபாவ

srivatsam

ஞன ப்ரஹ்மத்தினுடைய, வரேணிய:-பரமாநந்தை கரஸமான, ஹர்கஃ-தேஜஸ்ஸை, ஸகாரண ஸம்ஸ்கார பாதகமான நிர்குண ப்ரஹ்மத்தை யிமஹி-உபாசிக்கிறோம்.

வரத ராஜீயம்—யஃ-எந்த, ஸவிதா, நஃ - நம்முடைய, யியஃ ஜ்ஞானங்களை, ப்ரசோதயாத் - ப்ரவர்த்திப்பிக்கிறரோ? ஸவிதுஃ-ஜகதுத்ப்பாதகனும், தேவஸ்ய-ப்ரகாசிப்பவனுமாகிய அவனுக்கு, வரேணியம்-எல்லாரும் கொண்டாடத் தக்க. யத் - யாதொரு, பர்கஃ-பர்க்கஸ்உண்டோ? தத்-அதை, தீமஹி - த்யாநிக்கக் கடவோம். பர்கஃ - ப்ரகாசத்தைக் கொடுப்பதினால் ஜகத்தினது உள்ளும் புறம்பு முள்ளதமஸ்ஸைப்போக்குவது. காலஸ்வரூபி யாகையாலேஅவ்வவ்வ கர்மங்களின் பலத்துக்குச் சாதகமாக அடையப்படுவது. மழைபெய்வித்து பூதங்களைப் பரிப்பது ஆக இத்தால் சொல்லப்பட்ட தென்னவெனில்; ஸூர்ய மண்டலத்தினுள் எழுந்தருளி யிருக்கும் பரமாத்மாவான பரப்ரஹ்மத்தை உபாசிக்கிறேன் என்பதாம்.

கிருஷ்ண பட்டீயம்:—திவ்யத இதி தேவஃ - திவ் என்பது ஒருதாது. அது கிரீடை முதலிய பல அர்த்தங்களைச்சொல்லும் தன் உதயத்தாலும் அஸ்தமனத்தாலும் லோகயாத்ரையை நடத்திக்கொண்டு ஸஞ்சரிப்பவன், ப்ரகாசிக்குமவன், த்யானம் செய்பவர்களது ஹ்ருதயகமலத்தில் க்ரீடிப்பவன், த்யுலோகத்திலிருப்பவன், என்பவை தேவஃ என்பதன் அர்த்தம். ஸவிதா ஸகல ஜனங்களின் ஸந்தோஷத்துக்கும் காரணமாகிய மழையை உண்டுபண்ணுமவன், ஸகல ஜனங்களுக்கும் ச்ரேயஸ்ஸைக் கொடுப்பவன், வரேணியம் - மோக்ஷ காமிகள் வரிக்கத்தக்கது, ச்ரேஷ்டமானது. பர்க்கஃ-தமஸ்ஸைப் போக்குவது. தேஜஸ்ஸென்பது பொருள்-சிவ வாசகமான பர்க்கசப்தம் அகாராந்த புல்லிங்கம்; இந்த பர்க்கசப்தம் ஸகாராந்த நபும்ஸகலிங்கம்- தியஃ நமது புத்திகளை துஷ்கர்ம விமுகங்களாகவும் ஸகல ஸத்கர்மாநுஷ்டான பரங்களாகவும் எவர் ப்ரேரிக்கிறரோ, தேவனான அந்த ஸவிதாவினுடைய ச்ரேஷ்டமான தேஜஸ்ஸை நாங்கள் த்யாநம் செய்கிறோம்.

வித்யாரண்ணிய ஸ்வாமி—யஃ-எந்த ப்ரம்மமானது, ஜீவாத்மாவாக அனுப்ரவேசித்து. நஃ - வாஸநா பலத்தாலே த்ருடமாக பேதபுத்தியைக்கொண்ட நம்முடைய, யியஃ - அந்தஃகரண விருத்திகளை,ப்ரசோதயாத்-ப்ரேரணம் செய்யுமோ? தத்-வாக்கு மனஸ்ஸுக்களுக்கு விஷயமல்லாத, ஸூர்ய மண்டலமத்தியத்தில் த்யானிக்கத்தக்க, ஸவிதுஃ-ஸகல ஜகதுத்பத்தி ஸ்திதிலய ஹேதுபூதனன-தேவஸ்ய-ஸ்வயம் ப்ரகாசமான பரப்ரஹ்மத்தினுடைய, வரேண்யம் - எல்லாராலும் ஆஸ்ரயிக்கத்தக்க,பர்க்கஃ

ஸ்வஸாக்ஷாத்காரத்தாலே அவித்யையைப் போக்குமதான ஸ்வரூபத்தை தீமஹி-ஸோஹம், என்று அபேதாத்யவஸாயம் செய்து த்யாநிக்கக் கடவோம்.

நிர்ணய கல்பவல்லி—தேவஸ்ய - அகண்டாநந்த ஸ்வரூபியான, ஸவிதுః - நாநாவித உபாஸநங்களுக்கும் பலத்தைக் கொடுப்பவரான, தத். ப்ரம்மத்தினுடைய, பரப்ரஹ்மமே ஆனந்தரூபமாயிருக்க "வரேண்யம்" என்று சொல்வது போல அவித்யாதோஷ சாமக தேஜோரூபமான ப்ரம்மத்தையே இங்கு ப்ரம்மத்தின் தேஜஸ்ஸென்று சொல்லுகிறது. இது ஔபசாரிக ப்ரயோகம், ஆக இத்தால் சொல்லப்படுகிறதாவது தனக்கு இரண்டாவது இல்லாமல் பரமாநந்த ஸ்வரூபமாய் பரிபூர்ணஜ்யோதி ஸ்வரூபமாய் பிம்பம் போலே ப்ரஹ்மம் இருக்கிறது, ஜகத்தெல்லாம் அதன் ப்ரதி பிம்பமே, அப்படிப்பட்ட பரப்ரஹ்மத்தை த்யாநிக்கிறேன் என்பதாம். அந்தஃகரண தர்மாதிகளுக்கு ஸாக்ஷியாயிருக்கிறது பரப்ரம்மம்.

ஸாரதீபம்—யஃ - எந்தபரமாத்மாவானவர், நஃ - அவருக்கு ஸர்வாத்மநாபராதீனர்களாயும் சேஷபூதர்களுமான நமது, தியஃ-புத்திகளை, எல்லா வ்யாபாரங்களிலும், ப்ரசோதயாத்-ப்ரேரிக்கிறாரோ, "யோந்தஃ ப்ரவிச்ய மமவாசமிமாம் ப்ரஸுப்தாம் ஸஞ்ஜீவயத்யகில சக்திதரஸ் ஸ்வதாம்நா" என்றதிறே. ஸவிதுஃ - ஸகலஜகதுபாதான காரணமான, தேவஸ்ய - ஜகத்வ்யாபார லீலனான ஸ்ரீயஃபதியினுடைய, ஸூர்யனுக்கு அந்தராத்மாவும் ஸூர்யமண்டலத்திலிருப்பவருமான நாராயணனுடைய வரேண்யம் - மோக்ஷார்த்திகளால்ப்ரார்த்திக்கப் படுகிற, தத் - வேதாந்த ப்ரதிபாத்யமான, பர்கஃ - ஸம்ஸாரதாப நிர்வாபகமாய் தேஜோரூபமான திவ்யமங்களவிக்ரஹத்தை, தீமஹி, தியானிக்கிறோம். 'த்யேயஸ்ஸதா ஸவித்ரு மண்டலமத்யவர்த்தீ நாராயண:' என்றார்களிறே,

நீலகண்டர்—காயத்ரியால் ஸதாசிவன் ப்ரதிபாதிக்கப்படுகிறான் என்றார்.

இவ்விதமான அர்த்தங்களில் தம்தம் குரு உபதேசித்த அர்த்தத்தை அனுஸந்தானம் செய்துக்கொண்டு ஜபஞ்செய்யவேண்டியது. காயத்ரியோடு அஷ்டாக்ஷரத்தைத் தக்கபடி ஜபம் செய்யவேண்டும்.

காயத்ரீ ஜபம் முடித்தபின்பு மூன்று ப்ராணாயாமம் செய்து ப்ராதஸ்ஸந்த்யாமுபஸ்தாஸ்யே ப்ராதஸ் ஸந்தியையின் உபஸ்தானம் செய்கிறேன் என்று ஸங்கல்பித்துக் கொண்டு.

srivatsam

உத்தமே ஶிகர இத்யநுவாகஸ்ய வாமதேவ ருஷி:, அநுஷ்டுப் சந்த:, காயத்ரீ தேவதா, காயத்ர்யுத்வாஸநே விநியோக:

(உத்தமேசிகரேதேவி என்னும் அனுவாகத்திற்கு வாமதேவர் ருஷி, அனுஷ்டுபு சந்தஸ்ஸு, காயத்ரீதேவதை. காயத்ரியை உத்வாஸநம் செய்வதில் விநியோகிக்கப்பட்டது.) என்று ருஷ்யாதிந்யாஸம் செய்து உத்வாஸநம் செய்யவேண்டும்.

ஓம். உத்தமே ஶிகரே தேவி பூம்யாம் பர்வத மூர்த்தநி।

ப்ராஹ்மணேப்யோ ஹ்யநுஜ்ஞாநம் கச்ச தேவி யதாஸுகம் ॥

விசிஷ்டாத்வைதம்:—ஹே தேவி - ஓ தேவியே, ப்ராஹ்மணேப்ய: - ப்ராஹ்மணர்களை, அநுஜ்ஞாநம் - அநுக்ரஹித்து, பூம்யாம்-பூமியிலே, பர்வத மூர்த்தநி - பர்வத் சிகரத்தில், உத்தமே ஶிகரே - ச்ரேஷ்டமான சிகரத்தில், முன் எங்கேயிருந்தாயோ அவ்விடத்திற்கு, யதாஸுகம் - வந்தபடியே ஸௌக்கியமாக கச்ச - போகக்கடவை.

வைத்யநாத தீக்ஷிதர்—தேவி - ஓ தேவியே, பூம்யாம் - பூமிக்கு வந்த நீ, ப்ராஹ்மணேப்ய: - ப்ராஹ்மணர்களாகியஎங்களுக்கு, அநுஜ்ஞாநம் - அநுஜ்ஞை செய்து தேஹயாத்ரைக்கு வேண்டியவைகளை செய்துகொள்ளும்படி அனுமதிசெய்து, உத்தமே - உத்க்ருஷ்டமும், ஶிகரே - எல்லாவற்றையும்விட உன்னதமுமான, பர்வத மூர்த்தநி - ஸுமேருவின் சிகரத்தில் ஸ்வஸ்தானமான ப்ரஹ்மலோகத்தில், யதாஸுகம் - சுகமாகவந்தபடியே, கச்ச-போகக்கடவாய்.

அய்யன் ஸ்வாமி பாஷ்யம்.—பர்வத மூர்த்தநி - மேருமுதலியவைகளுக்கும்மேலே, உத்தமே ஶிகரே - உந்நதமான சிகரத்தில் உள்ள, பூம்யாம் - யோக்கியமான ஸ்தலங்களில், கச்ச-போகக்கடவை, ப்ராஹ்மணேப்ய: - உன்னை உபாஸித்த ப்ராஹ்மணர்களால், அநுஜ்ஞாநம்ஹி - அநுமதி கொடுக்கப்பட்டது.

மித்ரஸ்யேதி த்ருசஸ்ய விஶ்வாமித்ர ருஷி:, ஆத்யஸ்ய ஹீராட் ச்சந்த:, பரயோர்காயத்ரீ த்ரிஷ்டுபௌ ச்சந்தஸீ மித்ரோ தேவதா, ப்ராத:ஸந்த்யோபஸ்தாநே விநியோக:

மித்ரஸ்ய சர்ஷணீத்ருத: ஶ்ரவோ தேவஸ்ய ஸாநஸிம், ஸத்யம் சித்ரஶ்ரவஸ்தமம் ॥ மித்ரோ ஜநாந் யாதயதி ப்ரஜாநந் மித்ரோ தாதார ப்ருதிவீமுத த்யாம், மித்ர: க்ருஷ்டீரநிமிஷாபி

𑌚𑌷𑍍𑌟𑍇 𑌸𑌤𑍍𑌯𑌾𑌯 𑌹𑌵𑍍𑌯𑌂 𑌘𑍃𑌤𑌵𑌦𑍍𑌵𑌿𑌧𑍇𑌮 । 𑌪𑍍𑌰𑌸𑌮𑌿𑌤𑍍𑌰 𑌮𑌰𑍍𑌤𑍋
𑌅𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌯𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌤 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯 𑌶𑌿𑌕𑍍𑌷𑌤𑌿 𑌵𑍍𑌰𑌤𑍇𑌨, 𑌨 𑌹𑌨𑍍𑌯𑌤𑍇
𑌨 𑌜𑍀𑌯𑌤𑍇 𑌤𑍍𑌵𑍋𑌤𑍋 𑌨𑍈𑌨𑌮𑌂𑌹𑍋 𑌅𑌶𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌤𑍋 𑌨
𑌦𑍂𑌰𑌾𑌤𑍍 ॥

மித்ரஸ்ய, என்பது மூன்றுருக்கு, இதற்கு ருஷிவிஸ்வாமித்திரர், முதல்ருக்குக்கு பிருட்சந்தஸ்ஸு. இரண்டாவதுக்கு காயத்ரிச்சந்தஸ்ஸு மூன்றாவதுக்கு த்ரிஷ்டுப்ச்சந்தஸ்ஸு. தேவதை மித்ரன். இம் மூன்றுக்கும் சேர்ந்து ப்ராதஸ்ஸந்த்யையின் உபஸ்தானத்தில் விநியோகிக்கப்பட்டன.

𑌚𑌰𑍍𑌷𑌣𑍀𑌧𑍃𑌤𑌃 - ப்ரஜைகளைப் போஷிக்கும், 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 தேவதையாகிய, 𑌮𑌿𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 - ஸூர்யனுடைய, 𑌸𑌤𑍍𑌯𑌂-உண்மையானதும், 𑌸𑌾𑌨𑌸𑌿𑌂 - நன்றாக அடையக்கூடியதும், 𑌚𑌿𑌤𑍍𑌰𑌶𑍍𑌰𑌵𑌸𑍍𑌤𑌮𑌂 - மிகவும் ஆச்சர்யமாகக்கேட்கப்படுவதுமான, 𑌶𑍍𑌰𑌵𑌃 - கீர்த்தியை, 𑌸𑍍𑌤𑍌𑌮𑌿 - ஸ்துதிசெய்கிறேன், 𑌮𑌿𑌤𑍍𑌰𑌃-இந்த மித்ரனானவன், 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌨𑍍 - அவர் அவர் கர்மாதிகளைத்தெரிந்து கொண்டு 𑌜𑌨𑌾𑌨𑍍 - ஜனங்களை, 𑌯𑌾𑌤𑌯𑌤𑌿 - அவர் அவர் கர்மாநுகுணமாக நடப்பிக்கிறான். மேலும், 𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 - இந்தமித்திரன், 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂- பூமியையும், 𑌉𑌤 - மேலும், 𑌦𑍍𑌯𑌾𑌂 - ஸ்வர்க்கத்தையும், 𑌦𑌾𑌧𑌾𑌰-தரித்தான். 𑌮𑌿𑌤𑍍𑌰𑌃-இந்தஸூரியன், 𑌕𑍃𑌷𑍍𑌟𑍀𑌃-ஜனங்களை, 𑌅𑌨𑌿𑌮𑌿𑌷𑌾-கண்மூடாமல், 𑌅𑌭𑌿𑌚𑌷𑍍𑌟𑍇-பார்க்கிறான். (அவனுக்கு நாம்,) 𑌘𑍃𑌤𑌵𑌤𑍍-நெய்யுடன்கூடிய, 𑌹𑌵𑍍𑌯𑌂-சருவை, 𑌸𑌤𑍍𑌯𑌾𑌯-பூர்ணமான பலத்துக்காக, 𑌵𑌿𑌧𑍇𑌮-பண்ணுகிறோம், 𑌮𑌿𑌤𑍍𑌰 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯- ஓமித்ரனே, காரணவஸ்துவே, 𑌯𑌃 - எவன், 𑌵𑍍𑌰𑌤𑍇𑌨 - நியமத்தோடு, 𑌤𑍇 - உனக்கு, 𑌶𑌿𑌕𑍍𑌷𑌤𑌿 - உபசரிக்கிறானோ, 𑌮𑌰𑍍𑌤𑌃-மநுஷ்யனான, 𑌸𑌃 அவன், 𑌪𑍍𑌰 - அதிகமாய், 𑌪𑍍𑌰𑌯𑌸𑍍𑌵𑌾𑌨𑍍-கர்மபலத்தோடு கூடினவனாக, 𑌅𑌸𑍍𑌤𑍁-ஆகட்டும், 𑌤𑍍𑌵𑍋𑌤𑌃-உன்னால் ரக்ஷிக்கப்பட்ட அவன், 𑌨 𑌹𑌨𑍍𑌯𑌤𑍇-ரோகம் முதலியவைகளால் பீடிக்கப்பட மாட்டான். 𑌨 𑌜𑍀𑌯𑌤𑍇-சத்துருக்களால் ஜயிக்கப்படமாட்டான், மேலும் இப்படி உன்னால்ரக்ஷிக்கப்பட்டவனை. 𑌅𑌂𑌹𑌃 - பாபமானது, 𑌅𑌨𑍍𑌤𑌿𑌤𑌃-ஸமீபத்திலும், 𑌨𑌾𑌶𑍍𑌨𑍋𑌤𑌿 - அணுகமாட்டாது, 𑌦𑍂𑌰𑌾𑌤𑍍-தூரத்திலும், 𑌨𑌾𑌶𑍍𑌨𑍋𑌤𑌿-அணுகமாட்டாது.

வித்—தேவஸ்ய, ச்ரவ:-கேட்கத்தக்க கீர்த்தியானது அதிகமாக இருக்கிறது. ஸாநஸிம்-பலத்தைக் கொடுப்பவரும், ஸத்

srivatsam

யம்-உண்மையே சொல்லுமவரும், சித்ரச்ரவஸ்தமம்-மிகவும் ஆச்சர்யமான கீர்த்தியையுடையவருமாகிய மித்திரனை பஜிக்கிறோம். யாதயதி-தங்கள் தங்கள் கார்யங்களில் யத்ன முடையவர்களாகச் செய்கிறார்.

நாராயண ஸ்வாமிபாஷ்யம்.—சர்ஷணீ-க்ஞானம், க்ஞானமுடையவர்களைச் சொல்லுகிறது; சர்ஷணீத்ருத:-ப்ராணிகளைத்தரிப்பவர். மித்ரஸ்ய-ஸர்வரக்ஷகர், வேதாந்தங்களில் சொல்லப்பட்ட அபரிச்சின்னமான மாஹாத்ம்யமுடையவர். தேவஸ்ய க்ரீடாசாலி. இப்படிப்பட்ட பகவானுடைய ஆச்சரியமான யசஸ்ஸானது,ஸா-மிகவும்,நவிம்-பஜிக்கத்தக்கது, ஸத்யம்-எக்காலத்திலும் அழிவில்லாதது. ஆச்சர்யமான பகவானது கீர்த்தியை நாம் ஸ்துதிசெய்கிறோம். கர்மாநுகுணமாக ஜகத்வ்யாபாரத்தை நடத்துவதால் ஈச்வரனுக்கு வைஷம்யம் நைர்க்ருண்யம் இவைவருமவையல்ல. தாதார-ரக்ஷித்தார். அபிசஷ்டே-ப்ரகாசிக்கச்செய்கிறார். எல்லோரும் பஜனம் செய்யும்படி அளவிறந்த ஆச்சரியகரமும் கேட்கத்தக்கதுமான கீர்த்தியை யுடைத்தாயிருக்கையும், பூமிமுதலிய எல்லா தத்வங்களையும்தரித்தலும் உத்பத்தியும் நாசமுமில்லாத ஜ்ஞாநத்தால் எல்லா ஜந்துக்களையும் ப்ரகாசிக்கச்செய்கையும், இங்கு மித்ரசப்தத்தால் சொல்லப்பட்ட பரமாத்மாவின் சிஹ்நங்களாம், ஸத்யாய-அவிகாரனான பரமாத்மாவுக்கு, முதலில் ஸ்துதிசெய்கிறேன் என்று வாக்கின் வ்யாபாரம் சொல்லப்பட்டது. மேல் பகவானது குணங்களை அநுஸந்தித்ததினாலே மனதின் வ்யாபாரம் சொல்லப்பட்டது. இங்கு காயத்தின் வ்யாபாரம் சொல்லப்பட்டது. ஹேமித்ர! ஆதித்ய! ப்ரளய காலத்தில் எல்லாவற்றையும் ரக்ஷிப்பவனான காரணவஸ்துவே! எந்தமனிதன் நியமத்தோடு உன்னை அன்னம் முதலியவைகளால் உபசரிக்கிறானோ, அவன் அன்னம் முதலிய ஸம்பத்துக்களால் மிகவும் பூர்ணனாக ஆகக்கடவன். பகவானுக்கு ஆராதனம் செய்யாமல் புஜிப்பதில்லையென்னும் நியமத்தோடு பகவதாராதனம் செய்பவனுக்கு பரமாத்மாஸ்வாநுபவமாகிய அன்னத்தைக்கொடுப்பவன் என்பது தாத்பர்யம். இவ்வாறு செய்யப்பட்ட நல்ல ஆராதனத்தால் ப்ரீதனான உன்னால் ரக்ஷிக்கப்பட்டவன் பரப்ரம்மத்தைப்ராபிக்கும் வரையில் ஆத்யாத்மிகம் முதலிய துக்கம் இல்லாமல் பகவான் ரக்ஷிக்கிறார். இந்த ஜன்மத்திலும் மறுஜன்மங்களிலும் பாபம் இவனை அணுகாது.

வைத்யநாத—ச்ரவ:-தேஜஸ்ஸு. ஆச்சர்யமான தேஜஸ்ஸையுடையவர்கள் சித்ரச்ரவஸ்ஸுக்கள். அவர்களுக்குள் உத்தமன். நஹந்யதே-ம்ருத்யுவால் அடிக்கப்படுவதில்லை. நஜீயதே-நூறுவயதிற்குக்குறைவதில்லை. அந்தித:-சமீபத்திலும், இந்த

ஜன்மத்திலும் என்கை. தூராத்-தூரத்திலும்; முன் ஜன்மங்களிலும் என்கை. செய்யப்பட்ட பாபம் இவனைப்பிடிக்காது.

ஸ்ரீராமசந்த்ரோதயம். ஸ்ரீராமாயணத்தில் 'மித்ரமௌபயிகம்' என்று மித்ரசப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. 'மாதா பிதாப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருதகதிர் நாராயண:' என்று நாராயணன் ஸுஹ்ருத் என்று சொல்லப்பட்டது. அதனால் இங்கு மித்திரனென்று சொன்னது ரிபூணாமபி வத்ஸலனான ஸ்ரீராமனையே; அவரது கீர்த்தியே ஆச்சர்யமானது. அடிக்கடி கேட்கத்தக்கது அவரது கீர்த்தியைப்பாடும் ஸ்ரீராமாயணமே; ஸ்ரீராமன் மனுஷ்யபாவனையிலிருந்தே தன் ஜனங்களை ரக்ஷித்தார். ஸாம்ஸாரிக பீடையொன்றும் இராமல் நீக்கிப் போகட்டுத் தன் நாட்டுளுள்ள சராசரங்களுக்கெல்லாம் தன்லோகத்தைக்கொடுத்தார். அவரே உபாஸ்யர். அவரே இம்மந்த்ரத்தால் உபாஸிக்கப்படத்தக்கவர்.

விநியோகம்; இம்மந்த்ரம் ப்ராதஸ்ஸந்த்யையின் உபஸ்தானத்தில் **விநியோகிக்கப்பட்டது. இதனால் உபஸ்தானம் செய்து திக்நமஸ்காரம் செய்யவெண்டும்.**

𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃, 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃, 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃-ஸந்த்யை, காயத்ரீ ஸாவித்ரீ, ஸரஸ்வதீ, இவர்களுக்கு நமஸ்காரம், 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃। எல்லாதேவதைகளும் நமஸ்காரம் நமஸ்காரம், 𑌕𑌾𑌮𑍋𑌽𑌕𑌾𑌰𑍍𑌷𑍀𑌨𑍍 𑌨𑌮𑍋 𑌮𑌨𑍍𑌯𑍁𑌰𑌕𑌾𑌰𑍍𑌷𑍀𑌨𑍍 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃, காமன் செய்தான் மந்யுசெய்தான் நமஸ்காரம் நமஸ்காரம்.

இப்படி கிழக்கு தெற்கு மேற்கு வடக்குகளில் அஞ்சலி செய்து த்ரிமூர்த்தியான பகவானை நமஸ்கரித்து அபிவாதனம் செய்யவேண்டும். ப்ரவரம், கோத்ரம், ஸூத்ரம், சாகை, சர்ம. இதுகளைச் சொல்லுவது.

𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌯𑍈 𑌦𑌿𑌶𑍇 𑌨𑌮𑌃-கிழக்கு திக்குக்கு நமஸ்காரம் 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌯𑍈 𑌦𑌿𑌶𑍇 𑌨𑌮𑌃-தெற்குதிக்குக்கு நமஸ்காரம், 𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌯𑍈 𑌦𑌿𑌶𑍇 𑌨𑌮𑌃-மேற்குதிக்குக்கு நமஸ்காரம். 𑌉𑌦𑍀𑌚𑍍𑌯𑍈 𑌦𑌿𑌶𑍇 𑌨𑌮𑌃-வடக்குதிக்குக்கு நமஸ்காரம், 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃 - மேல்திக்குக்குநமஸ்காரம், 𑌅𑌧𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃 - கீழ்திக்குக்கு நமஸ்காரம், 𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌾𑌯 𑌨𑌮𑌃 - ஆகாசத்துக்கு நமஸ்காரம், 𑌭𑍂𑌮𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃 - பூமிக்கு நமஸ்காரம், 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌨𑌮𑌃 - விஷ்ணுவுக்கு நமஸ்காரம்.

இப்படி கிழக்கு தெற்கு மேற்கு வடக்குகளில் மேல் கீழ் மேல் நடுக்களில் அஞ்சலி செய்து,

srivatsam

த்யேயஸ்ஸதா ஸவித்ருமண்டலமத்யவர்த்தீ நாராயண ஸ்ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட:, கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடீ ஹாரீ ஹிரண்மயவபுர் த்ருதசங்கசக்ர:,

ஸூர்யமண்டலமத்யத்தில் பத்மாஸனத்தின்மேல் தோள்வளைகள் மகரகுண்டலங்கள் கிரீடம் ஹாரம் முதலிய திருவாபரணங்களோடு சங்கசக்ரதரராய் ஸ்வர்ணமயமான திருமேனியோடு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந்நாராயணனே எக்காலத்தும் த்யாநிக்கத்தக்கவர். இவ்விதமாய் த்யாநம் செய்யவேண்டும்.

சங்கசக்ர கதாபாணே த்வாரகாநிலயாச்யுத ।
கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதம் ॥

பரமபதத்திலிருந்தால் ஆச்ரிதரக்ஷணத்திற்கு விளம்பம் நேரிடுகிறதென்று ப்ரக்ருதிமண்டலத்துக்குள் த்வாரகா புரியில் வாஸம் செய்பவனே! ஆச்ரிதரைக் கைவிடாதவனே! ஆச்ரித விரோதிகளை நிரஸநம் செய்யவேண்டி ஆயுதங்களை எப்போதும் திருக்கையிலேயே தரித்திருப்பவனே! பசுக்களையும் பசுபோன்ற அஜ்ஞானிகளையும் தன்பேறாக ரக்ஷிக்குமவனே! ச்ருதியில் சொன்ன பரப்ரஹ்மலக்ஷணமான செந்தாமரைபோன்ற கண்களையுடையவனே! உன்னைச் சரணமடைந்த என்னை ரக்ஷிக்க வேண்டும்.

srivatsam

இந்த ச்லோகத்தால் மானஸமாய் சரணாகதி செய்து அதனால் ஸந்த்யாவந்தனத்தில் நேர்ந்த வைகல்ப தோஷங்களைக்கழித்துக்கொண்டு.

நமோ ப்ரஹ்மண்யதேவாய கோப்ராஹ்மணஹிதாய ச ! ஜகத்திதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம: ॥

ப்ராஹ்மணர்களுக்கு தேவதையும், பசுக்கள் ப்ராஹ்மணர்கள் இவர்களுக்கு எப்போதும் ஹிதத்தையே செய்பவரும், ஜகத்துக்கு ஹிதத்தைச் சிந்திப்பவரும், பசுக்களைத் தன்பேறாக ரக்ஷிப்பவருமான கிருஷ்ணனைத் திருவடி தொழுகிறேன்: என்று ஸேவித்து அபிவாதனம் செய்யவேண்டும். ஸந்தியாமத்திகத்தில் நேர்ந்த நியமலோபப்ராயசித்தமாக கிருஷ்ண ஸ்மரணம் (ஸ்ரீக்ருஷ்ணாயநம:) என்று யாவத்சக்தி ஜபித்து ஆசமனம்பண்ணி ஸாத்விகத்யாகம் செய்யவேண்டும். பிறகு ஆசாரியர்கள் பெரியோர்களை வந்தனம் செய்யவேண்டும்.

இது ஸ்மார்த்தர்கள் சொல்லவேண்டியமுறை.

பூம்யை நம: என்பதற்குமேல்யமாய நம:.

யமாய தர்மராஜாய ம்ருத்யவே சாந்தகாய ச ! வைவஸ்வதாய காலாய ஸர்வபூதக்ஷயாய ச ॥ ஔதும்பராய தத்நாய நீலாய

பவராத்மநே । வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே நம:॥ ஜிதம் ஸத்யவ்ரதம் ப்ரஹ்ம ஸர்வஜ்ஞம் ஸர்வதோமுகம் । ஸர்வலோக ஸர்வஸாக்ஷ விஷ்ணுரூபாய வை நம: ॥ விஷ்ணுரூபாய வை நமோ நம இதி । நம: ஸ்ரீராமாய நம: ஸ்ரீதராய நமோ நம: நமோ நமஸ்தே ஸ்ரீராமாய நமோ நம: ஸர்வ தேவ நமஸ்காரம் ப்ரதிகச்சதி ॥ ஸர்வதேவ நமஸ்காரம் ஸ்ரீவந்தே ஸர்வதேவ நமஸ்காரம் ஸ்ரீவந்தே ஸர்வதேவ நமஸ்காரம் ப்ரதிகச்சதி ॥ ஜநநீ ஜநக ஸர்வஜ்ஞ கூஷ்மாண்டவாந் ஸ்மரந் ।

வைஷ்ணவர்-ஸ்மார்த்தர்கள் சொல்லவேண்டியமுறை.

நமஸ்ஸவித்ரே ஜகதேக சக்ஷுஷே ஜகத்ப்ரஸூதி ஸ்திதி நாஶ ஹேதவே । த்ரயீமயாய த்ரிகுணாத்ம தாரிணே விரிஞ்சி நாராயண ஶங்கராத்மநே ॥ த்யேய: ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்தீ நாராயண: ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட: । கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடீ ஹாரீ ஹிரண்மயவபு: த்ருதஶங்கசக்ர: ॥ ஶங்கசக்ர கதாபாணே த்வாரகாநிலயாச்யுத । கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாகதம் ॥ ஆகாஶாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம் ॥ ஸர்வதேவ நமஸ்கார: கேஶவம் ப்ரதிகச்சதி ॥ ஸ்ரீகேஶவம் ப்ரதிகச்சத்யோம் நம இதி.

இதுகளை அநுஸந்தித்து த்வாரகாபுரிக்கு அதிபதியான ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்வை நமஸ்காரம் செய்து அபிவாதனம் செய்து.

ஓம் மந்த்ரஹீநம் க்ரியாஹீநம் பக்திஹீநம் ஜநார்தந ।
யத்க்ருதம் து மயா தேவ பரிபூர்ணம் ததஸ்து தே ॥
ப்ராயஶ்சித்தாந்யஶேஷாணி தப: கர்மாத்மகாநி வை ॥
யாநி தேஷாமஶேஷாணாம் க்ருஷ்ணாநுஸ்மரணம் பரம் ॥
காயேந வாசா மநஸேந்த்ரியைர்வா புத்த்யாத்மநா வா ப்ரக்ருதே ஸ்வபாவாத், கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்பயாமி ॥

அபிவாதனம் செய்யவேண்டும்.—வைஷ்ணவர் மூன்றுகாலத்தில் சொல்லவேண்டும் முறை.

srivatsam

श्रीरङ्गमङ्गलनिधिं करुणानिवासं श्रीवेङ्कटाद्रिशिखरालयकालमेघम् । श्रीहस्तिशैलशिखरोज्ज्वलपारिजातं श्रीशं नमामि शिरसा यदुशैलदीपम् ॥

ஸ்மார்த்தர்கள் சொல்லவேண்டும் முறை.

यच्छक्यं तन्न कृतं यदशक्यं कृत्यवत्तदाचरितम् । उभयोः प्रायश्चित्तं शिव तव नामैकमेवोचितम् ॥ என்றுசொல்லி 'சிவசிவ' என்று யாவச்சக்தி சொல்லி ஆசமனஞ்செய்து, अद्या नो देव सवितः प्रजावत्सावीस्सौभगम्, परा दुष्ष्वप्नियꣳ सुव, विश्वानि देव सवितर्दुरितानि परासुव, यद्भद्रं तन्न आसुव, என்று ஜபிப்பது. இது ஸ்மார்த்தர் கிரமம்.

இதுவரையில் ப்ராதஸ்ஸந்த்யோபாஸந முறை சொல்லப்பட்டது. பெரும்பாலும் ஸாயங்கால ஸந்த்யோபாஸனமும் பிராதஸ் ஸந்த்யாவந்தனம் போலவே, சில விடம்மாத்திரம் பேதமாகச்சொல்லப்படுகிறது.

ஸாயங்கால ஸந்தியா வந்தனம்.

ஸங்கல்பங்களில் प्रातस्सन्ध्या என்கிற இடங்களிலெல்லாம் सायंसन्ध्या என்று அனுஸந்திக்கப்படும். மாலைச்சந்தியை என்று பொருள். 'ஸூர்யச்சமாமந்யுச்ச இதற்குப் பதில் (அக்நிச்ச மாமந்யுச்ச) என்னும் மந்த்ரம் விநியோகிக்கத்தக்கது.

अग्निश्च मामन्युश्चेत्यस्य मन्त्रस्य सूर्य ऋषिः

देवी गायत्री छन्दः, अग्निर्देवता.

வடக்கு முகமாய் சந்த்யாவந்தம் செய்யவேண்டும். ப்ராத, காலம் போல் சந்த்யாவந்தனம் செய்யவேண்டும் - ஆசமனம் ப்ராணாயாமம் சங்கல்பம் முதலானதுகள் க்ரமமாய் செய்துகொண்டு அக்னிஶ்ச என்னும் அனுவாகத்திற்கு ஸூர்யன் ருஷி காயத்ரீ ச்சந்தஸ்ஸு, அக்னிதேவதை, ப்ரதிபதம் ஸூர்யச்ச என்னும் மந்த்ரம்போல் சொல்லவேண்டியது. அர்த்தபேதங்கள் அடியில் எழுதியிருக்கிறது.

இந்தமந்த்ரம் சாயங்காலத்தில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு மந்திரத்தைச் சொல்லி பிறகு சாப்பிடவேண்டும்.

अग्निश्च मा मन्युश्च मन्युपतयश्च मन्युकृतेभ्यः, पापेभ्यो रक्षन्ताम्, यदह्ना पापमकार्षं मनसा वाचा हस्ताभ्याम्, पद्भ्यामुदरेण शिश्ना, अहस्तदवलुम्पतु, यत्किञ्च दुरितं मयि, इदमहं माममृतयोनौ सत्ये ज्योतिषि जुहोमि स्वाहा ॥

ப்ரதிபதம்.—அக்நிஶ்ச - அக்னியும், அஹ்நா - பகற்காலத்தில், அஹ: - பகற்காலமானது, ஸத்யே - ஸத்யரூபமான, மற்றப் பதங்களுக்குப்பொருள் ஸூர்யஶ்ச என்னும் அனுவாகத்தில் சொல்லப்பட்டது.

அர்த்தம்.—ஸத்யே - பாதரஹிதமான உதயகாலம் முதல் இதுவரையில் நான் செய்த எல்லா பாபங்களையும் அஹரபிமானிதேவதை போக்கக்கடவது.

வ்யா.—அக்ரம்நயதி - ப்ரதான ஸ்தானத்தை அடைவிப்பதால் பரமாத்மாவே அக்னி, "அஹஸ்ஸம்வத்ஸரோவ்யாள:" என்று ஸஹஸ்ரநாமத்தில் சொல்லுகையால் "அஹ:" என்பதும் பரமாத்மாவின் நாமம். நஹீந: - அஸ்ய - இதி - அஹ: - இவன் ஹீநனென்று யாரையும் கைவிடுவதில்லையாதலால் அஹஸ் என்பது பரமாத்மா. அநாதியான அவித்யையென்னும் ராத்திரியைக் கழித்து க்ஞானமென்னும் ப்ரகாசத்தைக் கொடுப்பதால் ராத்திரியை நீக்கி வெளிச்சத்தைத்தரும் பகல்போன்றவரென்றும் பொருள் கூறலாம். "ஸத்யம் ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்ம" என்கையால் ஸத்ய சப்தமும் ப்ரஹ்மநாமமே. ஸத்புருஷர் விஷயத்தில் ஸாதுவென்பதும், தான் ஸத்யத்திலும் ஸத்யம் என்பதும் தன்னிடத்திலும் ஸத்யம் ப்ரதிஷ்டிதமாகையாலும், ஸத்யமான வைபவமுடையனாகையாலும், ஸத்யனென்பதும் நிருபாதிக ஸத்தாவானென்பதும் இதன்பொருள்.

ஸாயம்ஸரஸ்வதீம்ஶ்யாமாம்ஸவிம்ஶத்யப்தாம் ।
ஸாமவேதம்வ்யாஹரந்தீம் சக்ராயுதமஹாம்ஸஹாம் ॥
த்யாயாமிவிஷ்ணுதைவத்யாம் வ்ருத்தாம்கருடவாஹநாம் ।

(பெயர்) ஸரஸ்வதீ, வர்ணம் கறுப்பு, உச்சரிப்பது ஸாமவேதம், கையில் ஆயுதம் சக்கிரம், வயஸ்ஸு, வார்த்தகம், வாஹனம் கருடன். தேவதை விஷ்ணு.)

இம்முறையே த்யானம்செய்யவேண்டும் வாக்ரூபமாகையாலே ஸரஸ்வதியென்று சொல்லப்படுகிறது. 10 பெரிய காயத்திரிசெய்து பிறகு ப்ராணாயாமம்செய்து 108 காயத்திரிஜபம் செய்து உபஸ்தானம் செய்யவேண்டும்.

உபஸ்தானத்தில் 'இமம்மே' என்பது முதலிய ஐந்துருக்குக்கள் விநியோகிக்கவேண்டும்.

இமம்மே என்பது முதலிய ஐந்துருக்குக்களுக்கும் தேவராதர் ருஷி, சந்தஸ்ஸு காயத்ரீ முதலியவை. தேவதை ஸூர்யன்.

இமம்மஇதிபஞ்சாநாம் தேவராதருஷி:, காயத்ர்யாதய: சந்தாம்ஸி, ஸவிதாதேவதா.

srivatsam

𑌇𑌮𑌂𑌮𑍇 𑌵𑌰𑍁𑌣 𑌶𑍍𑌰𑍁𑌧𑍀 𑌹𑌵𑌮𑌦𑍍𑌯𑌾 𑌚 𑌮𑍃𑌳𑌯 𑌤𑍍𑌵𑌾𑌮𑌵𑌸𑍍𑌯𑍁𑌰𑌾𑌚𑌕𑍇 ॥ 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌯𑌾𑌮𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑌦𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍇 𑌯𑌜𑌮𑌾𑌨𑍋 𑌹𑌵𑌿𑌰𑍍𑌭𑌿𑌃 । 𑌅𑌹𑍇𑌡𑌮𑌾𑌨𑍋 𑌵𑌰𑍁𑌣𑍇𑌹 𑌬𑍋𑌧𑍍𑌯𑍁𑌰𑍁𑌶𑌂𑌸 𑌮𑌾 𑌨 𑌆𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌮𑍋𑌷𑍀𑌃 ॥ 𑌯𑌚𑍍𑌚𑌿𑌦𑍍𑌧𑌿 𑌤𑍇 𑌵𑌿𑌶𑍋 𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰 𑌦𑍇𑌵 𑌵𑌰𑍁𑌣 𑌵𑍍𑌰𑌤𑌮𑍍 । 𑌮𑌿𑌨𑍀𑌮𑌸𑌿 𑌦𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌯𑌵𑌿 । 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑍇𑌦𑌂 𑌵𑌰𑍁𑌣 𑌦𑍈𑌵𑍍𑌯𑍇 𑌜𑌨𑍇𑌽𑌭𑌿𑌦𑍍𑌰𑍋𑌹𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌰𑌾𑌮𑌸𑌿 । 𑌅𑌚𑌿𑌤𑍍𑌤𑍀 𑌯𑌤𑍍𑌤𑌵 𑌧𑌰𑍍𑌮𑌾 𑌯𑍁𑌯𑍋𑌪𑌿𑌮 𑌮𑌾 𑌨𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌨𑌸𑍋 𑌦𑍇𑌵 𑌰𑍀𑌰𑌿𑌷𑌃 ॥ 𑌕𑌿𑌤𑌵𑌾𑌸𑍋 𑌯𑌦𑍍𑌰𑌿𑌰𑌿𑌪𑍁𑌰𑍍𑌨 𑌦𑍀𑌵𑌿 𑌯𑌦𑍍𑌵𑌾 𑌘𑌾 𑌸𑌤𑍍𑌯𑌮𑍁𑌤 𑌯𑌨𑍍𑌨 𑌵𑌿𑌦𑍍𑌮 । 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌤𑌾 𑌵𑌿𑌷𑍍𑌯 𑌶𑌿𑌥𑌿𑌰𑍇𑌵 𑌦𑍇𑌵𑌾𑌥𑌾 𑌤𑍇 𑌸𑍍𑌯𑌾𑌮 𑌵𑌰𑍁𑌣 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑌃 ॥

அம்பரீஷமஹாராஜன் யாகம்செய்தபோது யாகபசு நஷ்டமாய் விட்டது. அதற்குப்பதில் நரபசுவாக சுநச்சேபர் யூபத்தில் கட்டப்பட்டார். அவர் வருணனை ஸ்துதிசெய்கிறார். இமம் மேதத்வாயாமி என்னும் ருக்குகளினால்.

ப்ரதிபதம்.—𑌹𑍇𑌵𑌰𑍁𑌣 - ஓ வருணனே, 𑌮𑍇-என்னுடைய. 𑌇𑌮𑌂 - இந்த. 𑌹𑌵𑌂-ப்ரார்த்தனையை. 𑌶𑍍𑌰𑍁𑌧𑍀 - கேட்கவேணும், 𑌅𑌦𑍍𑌯 - இப்போதே, 𑌮𑍃𑌳𑌯 - என்னை ஸந்தோஷிப்பிக்கவேண்டும், 𑌅𑌵𑌸𑍍𑌯𑍁𑌃 - எனது ரக்ஷணத்தை இச்சித்தவனாய் 𑌤𑍍𑌵𑌾𑌂 - உன்னை, 𑌆𑌚𑌕𑍇 - த்ருப்தியையாசிக்கிறேன், 𑌤𑌤𑍍 - ஆகையால், 𑌤𑍍𑌵𑌾 - உன்னை, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 - வேதத்தால், 𑌵𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌃 - ஸ்துதி செய்பவனாய், 𑌯𑌾𑌮𑌿 - சரணமடைகிறேன். 𑌤𑌤𑍍 ஆகையால். 𑌯𑌜𑌮𑌾𑌨𑌃 - யாகம்செய்வான், 𑌹𑌵𑌿𑌰𑍍𑌭𑌿𑌃 - புரோடாசம் முதலியவைகளால், 𑌤𑌤𑍍 - தன்னிஷ்டமான பலத்தை, 𑌆𑌶𑌾𑌸𑍍𑌤𑍇 - கோருகிறான். 𑌹𑍇𑌵𑌰𑍁𑌣 - ஓவருணனே, 𑌅𑌹𑍇𑌡𑌮𑌾𑌨𑌃 - கோபமில்லாதவனால், 𑌇𑌹 - இந்தலோகத்தில், 𑌬𑍋𑌧𑌿 - என் யாசனையை அங்கீகரிக்க வேண்டும், 𑌉𑌰𑍁𑌶𑌂𑌸 - பெரிய கீர்த்தியை யுடையவனே. 𑌨𑌃 - எமது, 𑌆𑌯𑍁𑌃 ஆயுஸ்ஸை, 𑌮𑌾𑌪𑍍𑌰𑌮𑍋𑌷𑍀𑌃 - நாசம் செய்யாதே, 𑌹𑍇𑌦𑍇𑌵𑌵𑌰𑍁𑌣 - ஓவருணதேவனே, 𑌯𑌤𑍍 - எந்த, 𑌵𑍍𑌰𑌤𑌂 - வ்ரதமானது, 𑌤𑍇 - உனக்காகச் செய்யப்படுகிறதோ, 𑌦𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌯𑌵𑌿 - தினந்தோறும், 𑌵𑌿𑌶𑍋𑌯𑌥𑌾 - மனிதர்கள்போல 𑌪𑍍𑌰𑌮𑌿𑌨𑍀𑌮𑌸𑌿 - நாசம் செய்தவர்களாய் விடுவோம், 𑌚𑌿𑌤𑍍, 𑌹𑌿-இரண்டும் அசை, 𑌹𑍇𑌵𑌰𑍁𑌣 - ஓவருணனே. 𑌦𑍈𑌵𑍍𑌯𑍇𑌜𑌨𑍇 - தேவதைகளி

டத்தில், மநுஷ்யா: . மனிதர்களாகிய நாங்கள், -யத்கிஞ்ச - எந்த எந்த, இதம் - இந்தவிதமான, அபித்ரோஹம் - த்ரோஹத்தை, அசித்தி - அஜ்ஞானத்தால், சராமஸி - செய்தோமோ, யத் - எந்தகாரணத்தால், தவ - உனது, தர்மா - தர்மங்களை, யுயோபிம - நாசம் செய்தோமோ, தேவ - ஓ தேவதையே, ந: - எங்களை, தஸ்மாத் - அந்த, ஏநஸ: - பாபத்தால், மாரிரிஷ: - ஹிம்ஸியாதே, கிதவாஸ: - கபடிகளாகிய நாங்கள், ரிபவ: ந: - சத்ருக்கள்போல, தீவி - விளையாடினோமோ, யத்-எந்தபாபத்தை, ஸத்யம்-தெரிந்தேசெய்தோமோ, வா-அதை, உத-மேலும், யத்-எந்தபாபத்தை, நவித்ம - அறியாமல் செய்தோமோ, தாஸர்வா: - அவையெல்லாவற்றையும், விஷ்ய-நாசம் செய், சிதிரா-அவைகள் சிதிலமாகட்டும், இவ - அதை, அத-பிறகு, தே-உனக்கு, ப்ரியாஸ:-இஷ்டர்களாக, ஸ்யாம-ஆகக்கடவோம்.

பட்டபாஸ்கரர்—ஆசகே, ப்ரார்த்திக்கிறேன், தத் - அதற்காக, யாமி - உன்னை அடைகிறேன், ஆயு: - தீப்தியை, அன்னத்தை, ஹே தேவவருண? விச:—கேவல மனிதர்களாகிய நாங்கள், தே-உனது, வ்ரதம் - ஆராதமான, யத் - எந்தகார்யத்தை, ப்ரமிநீமஸி-விச்சேத மில்லாமல் செய்யவேண்டுமென்று நினைக்கிறோமோ, அதை அப்படியே செய்விப்பதால் நாங்கள் உன்னையே அடைகிறோம். நாங்கள் மனுஷ்யராகையால் அஜாக்கிரதைஸித்தமாயிருக்குமானதால் தேவதைகள் விஷயத்தில் நாங்கள் அல்பமாகவாவது அபராதம் செய்யக்கூடும். இது முதலியவைகளைப் பற்றி எங்களைக் கைவிடாமல் அனுக்கிரஹிக்க வேணும். கிதவாஸ - தங்கள் கார்யமே கண்ணாய் ஆடத்துடக்கிய ருத்விக்குகள். யத் - எதனால், ரிரிபு: - எங்களை நாசம் செய்தார்களோ, நதீவி - ஆயத்தில் நல்லமுடிவோடு துடங்கவில்லையே, சிதிரா-சிதிலங்கள்போல, தா:-அவைகளை, விஷ்ய-விடுவி.

வித்யாரண்யர்.—ப்ரஹ்மணா - மந்த்ரத்தினால், விசோயதா. எல்லா ஜநங்களும் தங்கள் தங்கள் கார்யத்தையே யோசிப்பது போல நாங்கள் உன் கர்மத்தையே யோசிக்கிறோம். நதீவி-ஸத்வ்யவஹாரத்தில் ப்ரவர்த்தியாமல் போனார்களோ.

நாராயணஸ்வாமி பாஷ்யம்.—வரணஏவ வருண: வரணம் என்பது ஆவரணம். சேதநாசேதநாத்மகமான எல்லா ப்ரபஞ்

சங்களுக்கும் ஆவரணமான பரமாத்மா. எல்லாவிடத்திலும் வாஸம் செய்தாலும் பாபங்களைத் தடுப்பதாலும் ஸம்பத்தைக் கொடுப்பதாலும், (வருண) பரமாத்மாவைச்சொல்லும், சரணுகதனுடைய அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்யவேண்டியது சரண்யனுடைய தர்மமென்பது காகபோதாத்யுபாக்கியானங்களில் ப்ரஸித்தமாயிருப்பதால் அபாரகாருண்ய வாத்ஸல்யசாலியான உனக்குச் சொல்லவேண்டுமோ, உன்னை ஆச்ரயிப்பவர்க்குப் பலம் ஸித்தமாகையால் எல்லோரும் உன்னைக்குறித்தே யாகஞ் செய்கிறார்கள். முமுக்ஷுவின் ப்ரதம பர்வமான கர்மயோகத்திற்கே பலம் ஸித்தமாயிருக்க சரணுகதனுக்குக்கேட்பானேன் என்று தாத்பர்யம். அனுதிகாலந்தொடங்கி அக்ருத்ய கரணம் க்ருத்யாகரணம் முதலிய பல அபராதங்களை நான் செய்திருப்பதால் அவைகளைப்பார்த்து 'நக்ஷமாமி, க்ஷிபாமி' என்று என்னை நிக்ரஹிக்க ஸங்கல்பியாமல், நான்செய்த சரணுகதிக்காக எல்லாவற்றையும் க்ஷமிக்கவேணும். சரணுகதர்களான நாங்கள் உனக்காராதனஞ்செய்யும் கைகளின் காலவிச்சேத மில்லாமல் செய்வித்துக் கொள்ளவேண்டும். நாங்கள் செய்த பகவதபசாரம் பாகவதாபசாரம் இவைகளை நீயே க்ஷமித்தருளவேணும். இது ப்ரபந்நனது நிர்ப்பரத்வாநு ஸந்தானக் கிரமம்.

srivatsam

வைத்யநாத தீக்ஷிதர்.—விவேகமில்லாத மனிதர்கள் விஹிதமானகர்மங்களை லோபம்செய்வதுபோல உன் ஆராதனமான கர்மங்களை விகாதம் செய்தோம். சொக்கட்டாணுடுமிடத்தில் போல வஞ்சகர்களான சத்துருக்கள் எங்கள்பேரில் ஆரோபிக்கும் பாபங்களைப்போக்கவேண்டும்.

க்ருஷ்ணபட்டர்.—ஆசகே - ரக்ஷகனுக வேண்டுமென்று கோறுகிறேன். அஹேடமாந: - அனுதரம் செய்யாமல், உருஸம்ஸ - பெரிய மந்த்ரங்களினுல் ஸ்துதிக்கத்தக்கவனே.

ஊஂமெ - மாயத்ரீ, தகூாயாஜி - த்ரிஷ்டுப், யஜூஷெ - மாயத்ரீ, யதிஂவ - ஜமதீ, கிதவாஸ: - த்ரிஷ்டுப்.

ப்ராத:காலஸந்த்யாவந்தனம்போல் உபஸ்தானம் செய்யவேண்டும்.

மாத்யாஹ்நிகம்.

ப்ராதக்காலம்போல ஆசமனம் ஸங்கல்பம் தர்ப்பணம் க்ரமமாகச்செய்யவேண்டியது. இந்தமந்த்ரங்களுக்கு ப்ரதிபதம் முன்போலவே.

ப்ராத:காலஸாயங்கால ஸந்த்யோபாஸனத்தில் - ஸூர்யஶ்ச : அக்னிஶ்ச இந்தஸ்தானத்தில் 'ஆப:புநந்து' என்னும் அனுவாகம் விநியோகிக்கப்படும்.

ஆப: புநந்த்வித்யநுவாகஸ்ய ஆப ருஷய:

அநுஷ்டுப் சந்த:, ப்ரஹ்மணஸ்பதிர்தேவதா.

ஆப:புநந்து என்னும் அனுவாகத்திற்கு அப்புக்கள் ருஷி அநுஷ்டுப்சந்தஸ்ஸு, ப்ரஹ்மணஸ்பதி என்பவர் தேவதை.

இந்தமந்த்ரம் மத்யானம் தீர்த்தத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மந்த்ரத்தைச்சொல்லி சாப்பிடவேண்டும்.

ஆப: புநந்து ப்ருதிவீம் ப்ருதிவீ பூதா புநாது மாம். புநந்து ப்ரஹ்மணஸ்பதிர் ப்ரஹ்ம பூதா புநாது மாம் ॥ யதுச்சிஷ்டமபோஜ்யம் யத்வா துச்சரிதம் மம । ஸர்வம் புநந்து மாமாபோ அஸதாம் ச ப்ரதிக்ரஹꣳ ஸ்வாஹா ॥

ஆப: - ஜலங்கள், ப்ருதிவீம் - பூமியை, புநந்து - பரிசுத்தமாகச் செய்யட்டும், பூதா - பரிசுத்தமான. ப்ருதிவீ - பூமியானது, மாம் - என்னை, புநாது - பரிசுத்தனுக்கட்டும்- ப்ரஹ்மண: - சதுர்முகனுக்கு, பதி:- ஸ்வாமியான நாராயணன், புநந்து-பரிசுத்தனுகச்செய்யட்டும், ப்ரஹ்மபூதா - பரமாத்மாவினுல் பரிசுத்தமான ஜலங்கள், மாம் - என்னை புநாது - பரிசுத்தனுகச்செய்யட்டும், யத் - எந்த உச்சிஷ்டம் - பரசேஷமானது, என்னுல் புஜிக்கப்பட்டதோ, அபோஜ்யம் - புஜிக்கத்தகாத எது என்னுல் புஜிக்கப்பட்டதோ, மம- எனக்கு, துச்சரிதம் - பாபம், யத்வா - எதுவுண்டோ, மாம்-என்னுடைய, ஸர்வம்- அந்த எல்லா பாபங்களையும், அஸதாம் - அயோக்யர்களிடத்திலிருந்து, ப்ரதிக்ரஹம் - நான் தானம் வாங்கினதையும், ஆப: - ஜலங்கள், புநந்து - போக்கி என்னைச் சுத்தனுகச்செய்யட்டும், ஸ்வாஹா - ஸ்வாஹா என்பது ஆஹுதி மந்த்ரம்.

அய்யன் ஸ்வாமிபாஷ்யம்.—அடையப் படுவதால் அப்பு - பரமாத்மா. ஜலங்கள் பகவானுக்கு ஸ்தானமாகையால் பெருமை யுடையவை. ப்ரஹ்ம - வேதஸாரம், அதற்கு ப்ரதிபாத்யனை பரமபுருஷன். மனம் வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களாலும் நான்செய்த, எல்லா பாபங்களையும் பரமாத்மா போக்கவேண்டும். ஸ்வாஹா என்பது ப்ரபத்தி மந்த்ரம்.

srivatsam

அத்வைத பாஷ்யம்:—ஜலங்கள் ஸர்வ தேவதா ஸ்வரூபிகளாகையால் அவைகள் என்னை பரிசுத்தனாகச்செய்யட்டும். பூமியில்படாத ஜலங்களில் ஆசமனம் செய்யக்கூடாதாகையால் ஜலம் பூமியில் விழவேண்டுமென்னும் தாத்பர்யத்தால் ஜலங்கள் பூமியைப் பரிசுத்தமாகச் செய்யட்டுமென்று ப்ரார்த்தித்து, பூமியில் உள்ள ஜலத்தை ஆசமனம் செய்வதால் பரிசுத்தனாகிருனென்று சொல்லப்பட்டபடியால் பூமி சுத்தனாக்கட்டுமென்று பின் பிரார்த்திக்கிறது. ப்ரஹ்மம் - வேதம், வேதத்தால் ப்ரதிபாதிக்கப்படும் பரமாத்மா. ப்ரஹ்மணஸ்பதி. பிதா ப்ராதா இவர்களின் உச்சிஷ்டம் போஜ்யம் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் அவர்கள் தர்ம வ்யத்யானமுடையவர்களாயிருந்தால் அது புஜிக்கத்தக்கதல்லவாகையால் அது என்னால் புஜிக்கப்பட்டிருந்தால் அதையும் என்று யதுச்சிஷ்டம் அபோஜியம் என்னும் பதங்களுக்கு அர்த்தம்.

ஸ்மார்த்தர்கள் த்யானம்.

உத்யந்தீம் ஸாவித்ரீம் ரவிமண்டலமத்யகாம்,
யஜுர்வேதம் வ்யாஹரந்தீம் ச்வேதாம் சூலகராம் சிவாம் ।
யுவதிம் ருத்ரதைவத்யாம் த்யாயாமி வ்ருஷவாஹநாம் ॥

(பெயர் ஸாவித்ரீ, உச்சரிப்பது யஜுர்வேதம், வர்ணம் வெளுப்பு. ஆயுதம் சூலம், தேவதை ருத்ரன். வாஹநம் வ்ருஷபம், வயது யௌவநம்) இவ்வாறு தியாநம் செய்யவேண்டும்.

ஸூர்யஸம்பந்தியாகையால் ஸாவித்ரீ. ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதால் ஸாவித்ரீ.

10 பெரியகாயத்ரீசெய்து ப்ராணாயாமம் செய்தபிறகு 28 ஜபம்செய்து ஸங்கல்பம்செய்து உபஸ்தானம்செய்து கொள்ளவேண்டியது.

ஆஸத்யேநேதி ஷட்ருசஸ்ய ஹிரண்யஸ்தூப ருஷி:
த்ரிஷ்டுப் த்ரிஷ்டுப், காயத்ரீ ஜகதீ,
த்ரிஷ்டுபநுஷ்டுபஃ ச்சந்தாம்ஸி ஸவிதா தேவதா.

ஆஸத்யேந என்பது ஆறுருக்கு. ருஷி - ஹிரண்யஸ்தூபர் த்ரிஷ்டுப் த்ரிஷ்டுப் காயத்ரீ ஜகதீத்ரிஷ்டுப் அநுஷ்டுப் இவைகள் முறையே சந்தஸ்ஸு. ஸவிதாதேவதை, என்று ந்யாஸம்செய்க

ஆஸத்யேந ரஜஸா வர்தமாநோ நிவேசயந், அம்ருதம் மர்த்யஞ்ச ஹிரண்யயேந ஸவிதா ரதேநா தேவோயாதி புவநா

விஶ்வஸ்ய ॥ உத்³வயம் தமஸஸ்பரி பஶ்யந்தோ ஜ்யோதிருத்தரம். தே³வந்தே³வத்ரா ஸூர்யமகந்ம ஜ்யோதி ருத்தமம் ॥ உது த்யம் ஜாதவேத³ஸம் தே³வம் வஹந்தி கேதவ: । த்³ருஶே விஶ்வாய ஸூர்யம் ॥

சித்ரந்தே³வாநா முத³கா³த³நீகம் சக்ஷுர்மித்ரஸ்ய வருண ஸ்யாக்³நே: । ஆப்ராத்³யாவாப்ருதி²வீ அந்தரிக்ஷம் ஸூர்ய ஆத்மா ஜக³தஸ்தஸ்து²ஷஶ்ச ॥ ௬ ॥ தச்சக்ஷுர்தே³வஹிதம் புரஸ்தாச்சு²க்ரமுச்சரத் பஶ்யேம ஶரத³: ஶதம், ஜீவேம ஶரத³: ஶதம், நந்தா³ம ஶரத³: ஶதம், மோதா³ம ஶரத³: ஶதம், ப⁴வாம ஶரத³: ஶதம், ஶ்ருணவாம ஶரத³: ஶதம், ப்ரப்³ரவாம ஶரத³: ஶதமஜீதாஸ்யாம ஶரத³: ஶதம், ஜ்யோக்ச ஸூர்யம் த்³ருஶே ॥ ௫ ॥ ய உத³கா³ந்மஹதோர்ணவாத்³ விப்⁴ராஜமாந: ஸரிரஸ்ய மத்⁴யாத்ஸமா வ்ருஷபோ⁴ லோஹிதாக்ஷ: ஸூர்யோ விபஶ்சிந்மநஸா புநாது.

ஸத்யேந-நல்ல இடங்களில் ப்ரகாசிக்கிற, ரஜஸா-தேஜஸ்ஸினாலே, ஆவர்தமாந:-சுற்றிவருபவரான, ஸவிதா, தே³வ:-ஸூர்யனான தேவன், அம்ருதம்-தேவதைகளையும், மர்த்யம்-மனிதர்களையும், நிவேஶயந் - தங்கள் தங்கள் வ்யாபாரங்களைச்செய்யும்படி செய்து கொண்டு, ஹிரண்யயேந-ஸ்வர்ணமயமான, ரதே²ந-ரதத்தோடு, பு⁴வநா-லோகங்களை, பஶ்யந்-அவரவர்கர்மங்களுக்கு ஸாக்ஷியாகப் பார்த்துக் கொண்டு, யாதி-சஞ்சரிக்கிறார், தமஸஸ்பரி-அந்தகாராதிகளை நசிப்பிக்கிறவரும், ஜ்யோதி:-தேஜோரூபமானவரும், உத்-தே³வம் - உத்தம தேவதையும், உத்தரம்-ச்ரேஷ்டமானவரும், தே³வத்ரா-தேவதைகளை ரக்ஷிப்பவருமான, ஸூர்யம்-ஸூர்யனை, பஶ்யந்த: - பார்க்கும், வயம்-நாங்கள், உத்தமம்-ச்ரேஷ்டமான, ஜ்யோதி:-தேஜஸ்ஸை, அகந்ம-அடைவோம். ஜாதவேத³ஸம் - செய்யப்பட்டகர்மங்களை யெல்லாமறிந்தவரும், ஸூர்யம்-ஸூர்யனென்றும்ப்ரஸித்தமான, தம் அந்த, தே³வம்-தேவதையை, விஶ்வாய-ஜனங்களின், த்³ருஶே-பார்வைக்காக, கேதவ:-ஆயிரம் கிரணங்கள், உத்³வஹந்தி-வஹிக்கின்றன, உ-அசை, தே³வாநாம்-தேவதைகளுக்குள்ளே, சித்ரம்-ஆச்சர்யகரமானதும், மித்ரஸ்ய வருணஸ்யாக்³நே: - மித்ரன் வருணன் அக்னி இந்த தேவதைகளுக்கு, சக்ஷு: - கண்போன்றது

srivatsam

மாகிய, சுக்ரம்-மண்டலமானது, உதகாத் - உண்டாயிற்று, ஸூர்ய:-அம்மண்டலத்திலுள்ள ஸூர்யன், ஜகத: - ஜங்கமங்களுக்கும், தஸ்துஷஶ்ச - ஸ்தாவரங்களுக்கும், ஆத்மா - ஆத்மாவாய்க் கொண்டு. த்யாவாப்ருதிவீ-ஆகாசம் பூமிகளையும், அந்தரிக்ஷம்-ஸ்வர்க்கத்தையும், ஆப்ரா:-வ்யாபிக்கிறான், பூரிக்கிறான். தேவஹிதம்-தேவதைகளுக்கு ஹிதமானதும், சக்ஷு:-அவர்களுக்குக் கண்போன்றதும், புரஸ்தாத்-உதயகாலத்தில் சுக்ரம்-வெளுத்ததும், உச்சரத்-உதயமாவதுமான, தத்- அந்தமண்டலத்தை, சரதஶ்சதம்-நூறுவருஷம், பச்யேம-பார்க்கக்கடவோம் (யாவதாயுஷமும் பூஜிக்கக்கடவோம்) ஜீவேம-நூறுவருடம் ஜீவிக்கக்கடவோம், நந்தாம-புத்திரபௌத்ராதி ஸம்ருத்தர்களாகக்கடவோம், மோதாம-ஸந்துஷ்டர்களாகக்கடவோம், பவாம-ஸ்வஸ்தானத்தில் அபிவருத்தர்களாகக் கடவோம், ச்ருணவாம-ப்ரியவசனங்களையே கேட்கக் கடவோம், ப்ரப்ரவாம-ப்ரியவசனங்களையே சொல்லக்கடவோம், அஜீதாஸ்யாம-சத்ருக்களால் ஜயிக்கப் படாதவர்களாகக் கடவோம், ஜ்யோக் - ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற, ஸூர்யம்-ஸூர்யனை, த்ருசே-பார்க்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம், ய:-எந்த ஸூர்யன், அர்ணவாத் மஹத:-பெரிய ஸமுத்திரத்திலிருந்து, உதகாத்-உண்டானானோ, ஸரிரஸ்ய-ஜலத்தினுடைய, மத்யாத்-மத்யத்தில், விப்ராஜமான:-ப்ரகாசிக்குமவனும். வ்ருஷப:-அவரவர்களுக்கிஷ்டமான பலத்தைக் கொடுப்பவனும், லோஹிதாக்ஷ:-சிவந்த காந்தியுடையவனும் விபஶ்சித்-ஸர்வஜ்ஞனுமாகிய, ஸ:-அந்த. ஸூர்ய:-ஸூர்யன், மா-என்னை மனஸா- ஆதரவோடு, புநாது-ரக்ஷிக்கட்டும்.

srivatsam

பட்டபாஸ்கரபாஷ்யம்.—ஸத்யேந - நித்யமாக, ரஜஸா - ஜ்யோதிர்மயமண்டலாத்மகமானமண்டலத்தால், ஆவர்த்தமாந: உதயாஸ்தமங்களைப் பண்ணுமவன், விபச்யந்-ஹிதங்களைப்பண்ணுமவன், சித்ரம்-லோகபூஜிதமானது, ஆத்மா-ப்ரேரகன், அல்லது "ஸயச்சாயம் புருஷேயச் சாஸாவாதித்யே - என்கையால் அவனே பரமாத்மா.

வித்யாரண்யபாஷ்யம்.—ஸத்யேந-அமோகமான, ராஜஸா- ஸந்தோஷிப்பிப்பதான மண்டலத்தால், ஆவர்த்தமாந:-உதய

ஸ்தமயங்களில் ஸஞ்சரிப்பவர், ஆயாதி - ப்ரதிதினம் உதயமாகிறார், நிவேசயந் - தேவசரீரம் மநுஷ்யசரீரம் இதுகளை அந்தந்த காலத்தில் தன் ப்ரகாசத்தால் வ்யவஹார யோக்யமாகச் செய்பவர், வயம் - நாங்கள், தமஸஃ-உத்தரம், ஜ்யோதிஃ-தமோநாசகமாகையால் உத்தமமான அக்னியின் தேஜஸ்ஸை, உத்பரிபச்யந்தஃ-உத்கர்ஷத்தோடு நாலுபக்கத்திலும் பார்த்துக் கொண்டு, தேவத்ரா-தேவதைகளுக்குள்ளே, ஸூர்யம் - தேவம் - ஸூர்ய ரூபமாகவே யிருக்கிற அக்னிஸம்பந்தியான, உத்தமம் ஜ்யோதிஃ உத்கிருஷ்டமான தேஜஸ்ஸை-அகந்ம - அடைந்தோம், சித்ரம்-நாநாவர்ணமானதும், தேவாநாம் - காந்திகளுக்கு, அநீகம்-ஸேனைபோன்றதுமான மண்டலம்.

அய்யன் ஸ்வாமி பாஷ்யம்.—ஸத்யேந - காலத்தால்உண்டாகும் விகாரமில்லாத நித்யவிபூதியோடும், ரஜஸா - ரஜோகுணம் கலந்த லீலாவிபூதி யோடும், ஆவர்த்த்மாநஃ-எப்போதும் இருப்பவரான, ஸவிதா - பரமாத்மாவானவர், அம்ருதம்-முமுக்ஷுக்களுக்கு மோக்ஷத்தையும், மர்த்யம்ச - புபுக்ஷுக்களுக்கு ஐஹிகபலத்தையும், நிவேசயந்-கொடுத்துக் கொண்டு, புவநா-ஸகலப்ராணி வர்கங்களையும், விபச்யந் - அவரவர் கர்மாநுகுணமாக நியமிப்பதற்காக நன்றாய்ப்பார்த்துக் கொண்டு, ஹிரண்மயேந-ச்ரேஷ்டமான, ரதேந-கருடனென்றும்ரதத்தால், ஆயாதி-எழுந்தருளுகிறார். அவரை உபாஸிக்கிறேன், தமஸஃ-ப்ரகிருதிக்கு, பரி-மேல்பட்டதும், உத்தரம் ஜ்யோதிஃ-ச்ரேஷ்டதேஜஸ்ஸுமான, ஸூர்யம்-பூஜ்யனை, தேவம்-பரமாத்மாவை, அப்ராக்ருததிவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டனை பரமாத்மாவை உபாஸிப்பதால் பரமபதத்தை அடைகிறோம், கேதுபோல் ப்ரபாவத்தைக்காட்டும் கல்யாண குணங்கள் அந்த பரமாத்மாவை ப்ரகாசப்படுத்துகின்றன. அவன் அந்த குணவசனாய் நம்மை ரக்ஷிக்கும் பொருட்டு ராமகிருஷ்ணதிரூபேண அவதாரம் செய்திருப்பதால் அவனை உபாஸிப்பது, சித்ரம் தேவாஸுரயுத்தம் முதலியது நேரிடும்போது தன் மூர்த்தி பேதங்களை ஸேனைபோல் தானேதோன்றுவித்து சத்ரு நிரஸநம்செய்தவர். ஸர்வப்ராணி ஜாதங்களுக்கும் அந்தராத்மா. சக்ஷுஃ-எல்லாருக்கும் ஜ்ஞானப்ரதானம் செய்வது. சுக்ரம். சுத்த ஸ்வபாவமானது, உச்சரத்-க்ஷயமில்லாதது, நந்தாம-புத்திரசிஷ்யாதிகளோடு பகவத் குணாநுபவம் செய்துகொண்டு ஸந்தோஷிக்கக் கடவோம்.

மோதமாவது அவ்வாநந்தத்தின் பரமகாஷ்டை, ச்ருணவாம-பகவத்கதைகளைக் கேட்கக்கடவோம். ப்ரப்ரவாமபாஹ்ய குத்ருஷ்டிகளுடன் உத்தமமாக வாதம் செய்யக்கடவோம். ப்ரப்ரவாம பாஹ்ய குத்ருஷ்டிகளுடன் உத்தமமாக வாதம் செய்யக்கடவோம், அஜிதாஃ-வேத விரோதிகளான தார்க்கிகர்களால் ஜயிக்கப்படாமலிருக்கக்கடவோம், ஸகல ப்ராணி ஜாதங்களையும் உள்ளும் புறமும் வ்யாபித்தவர் என்பது மஹதோர்ணவாத்ஸரிரஸ்யமத்யாத் என்பவைகளின் கருத்து, தர்ம ப்ரவர்த்தகரும் செந்தாமரைக் கண்ணனுமான பரமாத்மா, தன் ஸங்கல்பத்தால் என்னை ஸ்வாநுபவயோக்யனாகச்செய்யட்டும்.

மற்றவை மூன்று காலங்களுக்கும் ஒரேரீதியானவை.

இக்கிரந்தத்தில் ஸூக்ஷ்மமான ஸாரார்த்தங்கள் மாத்திரமே எழுதப்பட்டன. விஸ்தாரார்த்தங்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் ஸம்ப்ரதாயப்படி அவரவர் பெரியோர் முகமாய்த் தெரிந்து கொள்வது.

முற்றிற்று.

srivatsam

ஸாமவேத ஸந்த்யாவந்தந பாஷ்யம்.

ஸாமவேத ஸந்த்யாவந்தநமும் அநேகமாய் இந்த யஜுர்வேத ஸந்த்யாவந்தநம் போலவே யிருக்கும். சில இடங்களில் மாத்திரம் வேறுபட்டிருக்கும். செவ்வையாய்ப் பார்க்கவும். அந்தமந்த்ரங்களை எழுதப்படுகிறது.

ஹரி: ஓம்॥ அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்தாம் கதோபி வா முதலானதுகள் சொல்லவும். ஓம் அச்யுதாய நம:-அநந்தாய நம:-கோவிந்தாய நம: - கேஶவாய நம: - நாராயணாய நம: - மாதவாய நம: கோவிந்தாய நம:-விஷ்ணவே நம:-மதுஸூதனாய நம:-த்ரிவிக்ரமாய நம:-வாமனாய நம: - ஶ்ரீதராய நம: - ஹ்ருஷீகேஶாய நம: - பத்மநாபாய நம: - தாமோதராய நம:-பிறகு ப்ராணாயாமம் செய்யவேண்டியது.

ஸங்கல்பம்-ப்ராதஸ்ஸந்த்யாவந்தனம் கரிஷ்யே, ஆபோ ஹி ஷ்டா மயோபுவ: தா ந ஊர்ஜே ததாதன । மஹே ரணாய சக்ஷஸே । யோ வ: ஶிவதமோ ரஸ: । தஸ்ய பாஜயதேஹ ந:-உஶ